# செந்தமிழ்


தொகுதி : 94 | ஆகஸ்ட் 2000 | பகுதி : 8

திங்கள் இதழ்



மதிப்புறு ஆசிரியர் மா. தனுக்கோடி பாண்டியன் பி.ஏ.,
பி.எல்.,
மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை-1.

ஆசிரியர் பேரறிஞர் நா. பாலுசாமி
எம்.ஏ., பி.எல்., எம்.லிட்., எம்.எட்., பிஎச்.டி.,

# தமிழ்ச்சங்க ஆட்சிக் குழு

| | |
|---|---|
| திரு. நா. குமரன் சேதுபதி | தலைவர் |
| திரு. எம். பி. ஆர். மலையாண்டி என்ற அசோக் | துணைத்தலைவர் |
| திரு. மா. தனுக்கோடிபாண்டியன் | செயலாளர் |
| திரு. மா. சங்கரபாண்டியன் | உறுப்பினர் |
| திரு. கே. எஸ். டி. இராசேந்திரன் | உறுப்பினர் |
| திரு. டாக்டர். என். சேதுராமன் | உறுப்பினர் |
| திரு. கே. கந்தசாமி | உறுப்பினர் |
| திரு. வெ. பழனிச்சாமித்தேவர் | உறுப்பினர் |
| திரு. அ. சாமிஐயா | உறுப்பினர் |
| திரு. வே. திருவரங்கராசன் | உறுப்பினர் |
| திரு. இரா. அழகுமலை | உறுப்பினர் |
| திரு. க.சி. அகமுடை நம்பி | உறுப்பினர் |
| திரு.எஸ். பரங்குன்றம் | உறுப்பினர் |

# செந்தமிழ் ஆசிரியர் குழு

| | |
|---|---|
| பேரறிஞர். | நா. பாலுசாமி (ஆசிரியர்) |
| பேரறிஞர். | தமிழண்ணல் |
| பேரறிஞர். | செ.கந்தசாமி |
| டாக்டர். | என். சேதுராமன் |
| பேரறிஞர். | ம.ரா.போ. குருசாமி |
| பேரறிஞர். | சி.கதிர் மகாதேவன் |
| பேரறிஞர். | கு. துரைராசு |
| பேரறிஞர். | அ.அ. மணவாளன் |
| பெரும் புலவர். | இரா. இளங்குமரன் |
| பேரறிஞர். | அ. தட்சிணா மூர்த்தி |
| பேரறிஞர். | எஸ்.எம். கமால் |
| பேரறிஞர். | ஈ. கி. இராமசாமி |
| பேராசிரியர். | சே. அரிராமநாதன் |
| பேரறிஞர். | அ.மா. பரிமணம் |

# செந்தமிழ்

திங்கள் இதழ்

| இதழ் கட்டணம் | உள்நாடு | | வெளிநாடு | |
|---|---|---|---|---|
| ஆண்டுக்கட்டணம் | ரூ. | 60 | | |
| வாணாள் கட்டணம் | ரூ. | 500 | ரூ. | 1000 |
| புரவலர் கட்டணம் | ரூ. | 1000 | ரூ. | 2000 |
| தனி இதழ் கட்டணம் | ரூ. | 6 | | |

மதிப்புறு ஆசிரியர் மா. தனுக்கோடி பாண்டியன் பி.ஏ., பி.எல்.,
மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை-1.

ஆசிரியர் பேரறிஞர் நா. பாலுசாமி
எம்.ஏ., பி.எல்., எம்.லிட்., எம்.எட்., பிஎச்.டி.,

# பொருளடக்கம்

1. கபிலர் பாடல்களில் அழகியலும் ஆளுமையும் ..... ..... 267
பேராசிரியர் தெ. திருஞானமூர்த்தி

2. எல்லோர்க்கும் தொல்காப்பியம்
எழுத்ததிகாரம் - நூல் மரபு ....................... ...... 281
பேரறிஞர் நா. பாலுசாமி

3. பிற்காலச் சோழர் காலத் தமிழ் இலக்கியம்
காட்டும் குழந்தைச் சடங்குகள் ....................... ...... 284
பேரறிஞர் தா.ஈ. சுவரபிள்ளை

4. நரிவிருத்த ஆராய்ச்சி ....................................... ..... 290
பண்டித. இராமசுப்பிரமணிய நாவலர்

5. ஈன்று புறந்தருதல் - பெண்ணிய நோக்கு .................. 298
திருமதி சு. சந்திரா

# கபிலர் பாடல்களில் அழகியலும் ஆளுமையும்

-பேரறிஞர் தெ. திருஞானமூர்த்தி

*(முன் இதழ்த் தொடர்ச்சி...)*

**காட்சி முரண்:**

தலைவியின் மகிழ்ச்சி மனநிலையில் கபிலர் படைத்துக் காட்டும் காட்சி முரண் அதன் காரணங்களைக் கண்முன் நிறுத்துகின்றது.

*'அமுதம் உண்கநம் அயலில் ஆட்டி*

*.....*

*பெருமலை நாடனை வருஉம்என் றோளே.'*

என்பதே நற்றிணை 65ஆம் பாடலின் கருத்தாகும். இக்கருத்து இடைப்பட்ட 7 அடிகளில் தலைவன் பற்றிய சித்திரத்தோடு வெளிப்பட்டிருக்கும் நெறி எழில்மிக்கதாகும்.

கான்யாற்று நீர், விட்டுவிட்டு வருதலால் கரையோரத்துப் படிந்த, கலங்கும் பாசியை நீர் எங்கும் பரவச் செய்யும். ஒளிறு வெள்ளருவி ஒளி வீசும் துறையின்கண் பாய்ந்து புலியோடு போரிட்டது ஓர் யானை. புண்பட்டு நலிந்த அவ்வியானையின் நற்கோடு நயந்த அன்புஇல் கானவர் அதன்மேல் அம்பெய்தனர். அம்புபட்ட அவ்வியானையின் அச்சம் விளைவிக்கும் அவலக்குரல் பேரிடியைப் போல் காடெங்கும் ஒலிக்கும். அத்தகைய பெருமலை நாட்டிற்குரிய தலைவன் வருஉம் என்றதனால் நம் அயலில் ஆட்டி அமுதம் உண்க என்கிறாள் தோழி.

கரையோரத்துப் பாசி கான்யாற்று நீரால் கலங்கிப் பரவுதல், ஒளிறு வெள்ளருவித் துறையில் யானை புலியோடு போரிடுதல், புண்பட்ட யானையின் கோடு நயந்து அம்பெய்த அன்புஇல் கானவர், அன்புஇல் கானவரின் அம்புகளால் அவலப் பேரிடியாய் ஒலிக்கும் யானையின் துன்பக் குரல் முதலியன தலைவனின் பண்புச் சித்திரிப்புக்கான புறச்சித்திரிப்பாய் அமைந்து பாடல் சிறந்துள்ளது.

இக்காட்சி முரணே தலைவியின் மகிழ்ச்சி மனநிலையை வாசகன் மனத்தில் ஆழப் பதியச் செய்கிறது.

## உவமையே கவிதை:

அகப்பாடல்களில் அகச் சித்திரிப்பிற்கு விரிவான களத்தையுடையதாக அகநானூறு திகழ்கிறது. ஏனைய அக இலக்கியங்களில் இடம்பெறும் உவமைகளை விட அகநானூற்று உவமைகள் சூழலை விளக்கி இடம் பெறுவதால் அவை கற்பார் நெஞ்சில் ஆழப்பதிகின்றன. இவ்வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்ட புலவர்களுள் கபிலர் தலைசிறந்து விளங்குகின்றார். தலைவனின் வரவு கண்டு தலைவி மகிழ்ந்தாள் என்பதே கபிலரின் அகம் 42ஆம் பாடலின் அடிச்செய்தியாகும். இச் செய்தியைக் கபிலர் கவிதையாக்கி இருக்கும் திறம் சிறப்பானதாகும். 14 அடிப்பாடலில் முதல் நான்கு அடிகள் தலைவி பற்றியும் கடைசி இரண்டு அடிகள் தலைவன் வரவு பற்றியும் பேசுகின்றன. எஞ்சிய 8 அடிகள் உவமைக்கான சூழல் விவரிப்பாக அமைந்து கவிதை சிறந்துள்ளது.

*'நாடுவறங் கூர நாஞ்சி றுஞ்சக்*
*கோடை நீடிய பைதறு காலைக்*
*குன்றுகண் டன்ன கோட்ட யாவையுஞ்*
*சென்றுசேக் கல்லாப் புள்ள வுள்ளி*
*லென்றூழ் வியன்குள நிறைய வீசிப்*
*பெரும் பெயல் பொழிந்த வேம வைகறைப்*
*பல்லோ ருவந்த வுவகை யெல்லா*
*மென்னுட் பெய்தந் தற்றே ......'*

மழை பெய்யாது நாட்டில் பஞ்சம் மீதூர்ந்தது. கலப்பைகள் உழவின்றித் துஞ்சின. பசுமையற்ற கோடை நீண்டது.அதனால் குன்று கண்டன்ன கரைகளை உடைய குளத்திற்குப் பறவை இனங்களும் வருதல் இல்லை. உள் நீரின்மையால் வெட்பக் காற்று வீசிய குளங்களெல்லாம் வைகறையில் பெய்த பெருமழையால் நிரம்பின. இன்பம்மிக்க அவ்வைகறைப் பொழுதில் பல்லோர் உவந்த உவகை எல்லாம் தலைவன் வரவால் என்னுள் பெய்தது போல் இருந்தது என்கிறாள் கபிலரின் தலைவி.

உவமையினும் பொருள் சிறந்ததாகப் பாடல் புனைந்த கபிலர் இங்கு உவமையையே பாடலின் இதயமாக அமைத்துள்ளார். கபிலரின் கைவண்ணத்தில் உவமை பாடலில் புதுக்கோலம் கொண்டுள்ளது.

அகப்புற உணர்வுகளைக் கபிலர் தம் எதார்த்தமான உவமைகளாலும் சிறப்புற விளக்கியுள்ளார். கபிலரின் தலைவன், நடு யாமத்தே துயிலும் யானை பெருமூச்சு விட்டாற் போல என் உள்ளம் உயிர்த்துக் கொண்டு பிரிந்த பின்னரும் அவளிடத்துச் செல்வதாயுள்ளது (குறு.142) என்கிறான். தொல்காப்பியர் மெய்ப்பாட்டியலில் பெருவரவினவாக வரக்கூடிய 32 மெய்ப்பாடுகளை ஒரே நூற்பாவில் விளக்கிச் செல்வார். சிறு வரவினவாக அவர் கூறும் உயிர்ப்பு என்ற மெய்ப்பாட்டிற்கு உயிரோவியமாகக் கபிலரின் இப்பாடல் அமைந்துள்ளது. சிறியதில் அதுவும் அரியதில் அழகுச் சித்திரம் உணர்த்தி நிற்கிறது.

மழைத்துளி வேட்கையால் வானைநோக்கிய இசைபாடும் வானம்பாடிப் பறவை போல நின் மீதுள்ள அன்பால் தலைவி நின்னையே எதிர்பார்த்துக் காத்துக் கிடக்கின்றாள் (கலி. 10:20-21) என்கிறார். வானம்பாடிக்கு மழைத்துளி போலத் தலைவிக்கு நின் வரவு என்ற கபிலரின் உவமை தலைவியின் அன்புள்ளத்தைச் சிறப்பாக வெளிக்காட்டி உள்ளது.

*'கெட்டிடத் துவந்த வுதவி கட்டில்*
*வீறு பெற்று மறந்த மன்னன் போல'* (குறு. 225)

நன்றி மறந்தனையாயின் தலைவி நினக்கு எவ்வாறு உரிமையாவாள் எனப் பேசுகின்றாள் கபிலரின் தோழி. இரந்து குறையுற்று வேண்டித் தலைவியைப் பெற்றான் தலைவன் என்பதைக் கெட்ட இடத்து உவந்த உதவி என்ற உவமையின் முற்பகுதியும் புணர்ச்சிக்குப் பின்னர் வரைந்து கொள்ளாமல் காலம் தாழ்த்துதலைக் கட்டில் வீறு பெற்று மறந்த மன்னன் போல மறந்தான். என்பதை உவமையின் பிற்பகுதியும் விளக்கி நிற்கின்றன

நன்றி கொல்லும் நடப்புநிலை விளக்கும் நடப்புவமை பாடலில் குறியீட்டு உவமையாயும் அமைந்து அதன் அழகுக்கு அழகு சேர்த்துள்ளது.

தலைவியின் உறுதியான மன உணர்வைக் காட்டவும் அவளின் ஆழமான அன்புள்ளத்தை வெளிப்படுத்தவும் கபிலர் கையாளும் உவமைகள் வியப்பார்ந்தவை. இதனை இலக்கணிகள் கூடாப்பொருளொடு உவமித்தல் என்பர். தலைவன் வாய்மையில், அருளில், தொடர்பில் பொய் தோன்றின் முறையே திங்களுள்

தீத்தோன்றியது போலவும், நிழல் கயத்துள் நீருள் குவளை வெந்தது போலவும் வானத்து ஞாயிற்றின் சுடருள் இருள் தோன்றியது போலவும் (கு.கலி.5) என்கிறார் கபிலர்.

எதார்த்த உவமைகள் எதார்த்தம் மீறிய உவமைகள் என்ற இரண்டையும் தம் பாடல்களில் கபிலர் சிறப்புறக் கையாண்டுள்ளார். இவை இவர்தம் பாடல்களின் பொருட்தளத்தை ஆற்றலொடு உணர்த்தி இருப்பதோடு பாடலின் இலக்கியச் செழுமைக்கும் பங்காற்றி நிற்கின்றன.

## செய்திக்குள் செய்தி:

ஒன்றைக் கூறவரும் இடத்தில் அதனோடு தொடர்புடைய பிறிதொன்றையும் சொல்லிப் பாடலில் பொருட்தளத்தை விரிவுபடுத்தியுள்ளார் கபிலர். 'சினப்போர்க் கைவள் ஈகைக் கடுமான் பேக' (புறம். 201) எனப் பேகனின் வீரத்தையும் கொடையையும் இணைத்துப் பேசுகின்றார்.

*'ஊருட னிரவலர்க் கருளித் தேருடன்*
*முல்லைக் கீத்த செல்லா நல்லிசை'* (புறம். 201)

எனப் பாரியின் வள்ளன்மையை இரவரோடும் முல்லையோடும் தொடர்புபடுத்தித் தன் சொல்லாளுமையைப் புலப்படுத்தி உள்ளார். நாட்டையே இரவலர்க்குக் கொடுத்தவன் என்றாலே அது கொடையில் பெரிதாகும். ஆனால் அதற்கும் மேலாக முல்லைக்குத் தேர் ஈந்தவன் பாரி என அவன்தன் அருள் உள்ளத்தைக் காட்டி அறியாதாரையும் அறியச் செய்கின்றார் கபிலர். ஒன்று சொல் நன்று சொல் என்பதினும் மேலாக மற்றொன்றையும் ஆழப்பதியுமாறு சொல் என்பதே கபிலரின் கவிதை நெறியாகும்.

புறப்பாடல்களில் வெளிபடையாகப் பேசும் கபிலர் புறம் 119 ஆம் பாடலில் பூடகமாகப் பேசுகின்றார். இவ்வகப்பாடல் மரபு பாடலுக்கு வலுச் சேர்த்துள்ளது.

நிழலில்லாத நெடியவழியில் நின்ற தனிமரம் போல முரசுடை வேந்தரிலும் மிகுதியாக இரவலர்க்கு ஈயும் வள்ளன்மை மிக்கவன் பாரி என்கிறார் கபிலர்.

*'நிழலி னிரிடைத் தனிமரம் போலப்*
*பணைகெழு வேந்தரை யிறந்தும்*
*இரவலர்க் கீயும் வள்ளியோ னாடே'.*

என்ற கபிலரின் விவரிப்பு இங்கு சிந்திக்கத்தக்கது. முரசுடை வேந்தர் இருந்தாலும் அது நிழலில் நெடுவழிதான் என்பதையும் அந்நெடுவழியில் தனிமரம் போல் பயன் தந்து நிற்பவன் பாரி என்பதையும் இவ்வுவமை குறிப்பாய் உணர்த்தி நிற்கின்றது.

அமெரிக்கப் பொருளாதாரத் தடைக்கு உட்பட்ட ஓர் நாட்டோடு நட்புறவு வைத்துக் கொள்வது போன்றது மூவேந்தரைப் பகைத்துக்கொண்ட பாரியோடு உறவு கொள்வது என்பதாகும். இத்தகைய சூழல் தான் பாரி மகளிர்க்கு மணம் செய்து வைக்க முயன்ற கபிலரின் முயற்சிக்குத் தடையாய் நின்றது என்று கருத இடமிருக்கின்றது. புணைகெழு வேந்தரை இறந்தும் என்ற கூடுதல் தொடர் உணர்த்தும் பொருள் மூவேந்தர் என்பதைக் கூறாமல் கூறி நிற்கிறது. சொல்லாமற் சொல்லும் கபிலரின் சொல்லாளுமைக்கு இது சிறந்த சான்றாகும்.

**ஊசிக்குத்தும் ஓவியக் காட்சியும்:**

மன உணர்வினுக்கு ஏற்பச் சொற்களைக் கையாளுந்திறன் மிக்கவர் கபிலர். தலைவன் வருகின்ற வழியின் இடையூறு எண்ணித் தலைவி வருந்துகின்றாள் என்ற செய்தியைக் கபிலர் 'உலமரல் வருத்தம் உறுதும்' (அகம்.18) என்கிறார். வருத்தமுறும் தலைவியின் உளநிலையைத் துன்பச் சுழலில் ஆழ்கின்றாள் என்ற கபிலரின் உணர்த்தும் முறை சிறப்புடைத்தாகும்.

தலைவன் வரும் மலைவழி சிறு நெறி என்பதை 'யானை கயிற்றுப்புறத் தன்ன கன்மிசைச் சிறுநெறி' (அகம். 128) எனக் குறிப்பிடுகின்றார். பலரும் அறியா வழியை யாரும் அறியும் வண்ணம் அவர் அமைத்துக் காட்டும் அழகு உள்ளத்தில் யானை போல் காட்சி தருகின்றது. சிறியதை, அரியதை, அறியாததை யானை போல் யார்க்கும் அறியக் காட்டும் ஆற்றல் கபிலருக்குண்டு என்பதையே இச்சித்திரிப்பு விளக்கி நிற்கிறது.

தலைவனின் மாறுபாடான உளப்பாங்கைக் கபிலர் அழகுற காட்சிப்படுத்துகின்றார்.

*'கான மஞ்ஞை அறைஈன் முட்டை*
*வெயில்ஆடு முசுவின் குருளை உருட்டும்*
*குன்ற நாடன் கேண்மை ......'* (குறு. 38)

என்ற கபிலரின் சித்திரம் தலைவிக்கு மட்டுமன்று பாடலைப் படிக்கும் நமக்கும் அச்சத்தைத் தருவதாகும். அடைகாக்கப்பட வேண்டிய மயிலின் முட்டையை முசுவின் குட்டிகள் உருட்டி விளையாடுதல் என்பது

காண்போரின் உள்ளத்திலேயே அதிர்வுகளை ஏற்படுத்தக் கூடியதாகும். காண்போர் நிலையே இவ்வாறென்றால் மயிலை ஒத்த தலைவியின் மனநிலையை வாசகன் நிலைக்கே விட்டுவிடுகின்றார் கபிலர்.

கருத்துக்களைக் காட்சிப்படுத்துதலிலும் அவற்றை மனத்தில் பதிக்கச் செய்வதிலும் கபிலர் தனித்திறன் பெற்றுத் திகழ்கின்றார். பேகன் மனைவி கண்ணகியின் துன்பத்தைப் பின்வருமாறு உணர்த்துகின்றார்.

*........ .... சீறூ ராங்கண்*
*வாயிற் றோன்றி வாழ்த்தி நின்று*
*நின்னுநின் மலையும் பாட வின்னா*
*திகுத்த கண்ணீர் நிறுத்தல் செல்லாள்*
*முலையக நனைப்ப விம்மிக்*
*குழலினை வதுபோ லழுதனள் பெரிதே'* (புறம். 143)

நின்னையும் நின் மலையையும் பாட அதனைக் கேட்ட அவள் நிறுத்தாது அழுதால் என்றாலே அவள் துன்பநிலை உணர்த்தப்பட்டதாகிவிடும். ஆனால் கபிலரோ அதற்கும் மேலாக அவள் அழுத கண்ணீர் நினக்கு இன்னாதது என அறிவுறுத்தி நிற்கின்றார். அவள் அழுகை முலையகம் நனைத்தது; விம்மி விம்மி அழுதாள்; குழல் இரங்கி ஒலிப்பது போல் அழுதாள்; பெரிதாக அழுதாள் என அவர் குறிப்பிடுவன அவள்தன் துன்பத்தின் ஆழத்தையும் உரிமையிழந்த அவல நிலையையும் நன்கு விளக்குவனவாக உள்ளன.

**சிறுமையும் பெருமையும்:**

கபிலர் பாடல்களில் சிறு அலகுகள் கூட அவர்தம் சொல்லாளுமையை உணர்த்தி நிற்கின்றன.

*'சிறுகோட்டுப் பெரும்பழம் தூங்கி யாங்குஇவள்*
*உயிர்தவச் சிறிது காமமோ பெரிதே"* (குறுந். 18)

என்பதில் ஆற்றல் மிக்க உவமைக்கு முன்னொட்டுச் சொற்கள் அழகுசேர்த்து நிற்கின்றன. கோடு 'சிறு' என்ற சொல்லையும் பழம் 'பெரும்' என்ற சொல்லையும் முன்னொட்டுக்களாகச் சொற்கள் உரி, இடைச்சொற்களைப் பெற்று, பாடற்பொருளை நுட்பமாக்கியுள்ளன. உயிர் என்ற சொற்பின் இடம் பெறும் தவ என்ற உரிச்சொல் உயிர் மிகச் சிறிது என்ற சீரிய கருத்தை வழங்கியுள்ளது. காமம் என்ற சொல்லோடு ஓ என்ற இடைச்சொல் சேர்ந்து காமம் பெரிது என்பதைப் புலப்படுத்தி நிற்கிறது. பெரிதே என்ற சொல்லில் அமையும் ஏகாரம் அதனை மேலும் தெளிவுபடுத்தி நிற்கிறது.

**தொல்காப்பிய அழகியல்:**

விழுமிய சொற்களால் பாடல் அமைதல் வேண்டும் என்பது தொல்காப்பிய இலக்கியக் கோட்பாடாகும். கபிலர் அதற்கும் மேலாக உயர்ந்த சிந்தனை என்ற உச்சியை அடைகிறார். சொல்தவறாத சான்றோர்; என்றென்றும் இனியர்; என்றும் பிரிதல் அறியாப் பேரன்பினர்; நறுநுதல் பசத்தல் அஞ்சி பிரிதல் எனும் சிறுமை செய்யும் செயல் அறியாதவர்(நற்.1) என்கிறாள் கபிலரின் தலைவி.

பூக்களின் இராணியாகிய தாமரையின் மகரந்தத் தேன் சந்தன மரத்தில் தீந்தேனாகியது. மருத வளமும் குறிஞ்சி மணமும் கலந்த தீந்தேனாய்த் தலைவன் நட்பு என்று உணர்ந்து மகிழ்கிறாள் தலைவி. நீர் இன்றி யமையா உலகம் தம்மின்றி யமையாத் தலைவரின் உள்ளம் என எண்ணி வியக்கின்றாள். சொல், எண்ணம், செயல் என்ற மூன்றானும் உயர்ந்த பெருமைமிகு தலைவர் பிரிதல் எனும் சிறுமை அறியார்; செய்யார் எனத் தலைவி எண்ணியதில் வியப்பில்லை. சிறியன சிந்தியாதான் கபிலரின் தலைவன் தான் என்றால் அதில் மிகையில்லை. அதுதான் இலக்கிய வரலாறு கூறும் உண்மையாகும். மகிழ்ச்சியும் வியப்பும் கலந்த தலைவரின் புணர்ச்சியும் பண்பும் தலைவியின் உயர் எண்ணங்களுக்கு அடிப்படையாய் அமைந்தன.

தொல்காப்பியம் குறிப்பிடும் அகமாந்தர் உறவுநிலையைக் கபிலர் பாத்திரங்கள் சிறப்புடன் விளக்கி நிற்கின்றன. தோழி தலைவியோடு நெருங்கிய நட்புடையவள் என்றும், சூழ்தலும் உசாத்துணையும் அவள் கடமையென்றும் தொல்காப்பியம் சுட்டுகின்றது.

*"யாமே பிரிவின் றியைந்த துவரா நட்பி*
*னிருதலைப் புள்ளி னோருயி ரம்மே"* (அகம்.12)

என்றும் தோழியைப் படைத்துக் காட்டுகின்றார் கபிலர்.

தொல்காப்பியரின் இலக்கியக் கோட்பாட்டை ஆழ உணர்ந்தவர் கபிலர் என்பதற்கான இலக்கியச் சான்றே அவர்தம் குறிஞ்சிப்பாட்டு. தமிழர் வாழ்வின் இதயம் அகம். அகத்தின் உயிர் அறத்தொடு நிற்றல். இவ்வறத்தொடு நிற்றலை விளக்குதலே குறிஞ்சிப்பாட்டின் குறிக்கோட் பொருளாகும். ஆரியவரசன் பிரகத்தனுக்குத் தமிழ் உணர்த்தல் என்பது அகத்திணை மரபுணர்த்தல் மட்டுமன்று அறத்தொடு நிற்கும் நெறி உணர்த்துதல் என்பதுமாகும்.

நாடக வழக்கு, உலகியல் வழக்கு, பாடல் சான்ற புலனெறி வழக்கு என்ற மூன்றையும் உள்ளடக்கிப் படைக்கப் பெற்றது குறிஞ்சிப்

பாட்டாகும். பாடல்சான்ற புலனெறி வழக்கு என்பது பாலதாணையால் கூடிய தலைமக்கள் அந்நெறியினின்றும் பிறழாமல் அறத்தொடு நிற்றலாகும். இவ்வறத்தொடு நிற்றலைக் கபிலர் குறிஞ்சிப்பாட்டில் செம்மையாய்ச் சித்திரித்துக் காட்டும் முறையைக் குறிஞ்சிப் பாட்டின் ஈற்றில் இடம் பெறும் முதல் தனிப்பா நன்கு விளக்கி நிற்கிறது.

*"நின்குற்ற மில்லை நிரைதொடியும் பண்புடையள்*
*என்குற்றம் யானும் உணர்கலேன் - பொன்குற்*
*றருவி கொழிக்கும் அணிமலை நாடன்*
*தெரியுங்காற் றீய திலன்"*

என ஊழ்கூட்டுவித்த முறையைச் சிறப்பாக விளக்குகின்றார். செம்புலப் பெயல் நீரார் 'தாங்கலந்தனவே' என ஓர் குறிப்புத்தரும் அழகைப் போன்றது இது.

தமிழர் களவு கந்தருவ மணத்தினும் மேலானது என்பதை விளக்கவே

*''பழுவும் பாந்தளும் உளப்படப் பிறவும்*
*வழுவின் வழாஅ விழுமமவர்*
*குழுமலை விடரகம் உடையவால் எனவே''*

(குறிஞ். பா. 259-261)

எனத் தலைவி அறத்தொடு நிற்பதை அழுத்தமாகக் காட்டுகின்றார். களவுக் கூட்டம் கத்தருவக் கூட்டம் போல் கூடிப் பிரிதல் இல்லை. கூடிய தலைவன் மீண்டும் அவளைச் சந்தித்தான்; அருவி நீர் மீது சூளுரைத்தான் என அவர் காட்டுவது தமிழர் அகநெறி மாண்பை விளக்குதற்கேயாகும். தமிழர் களவு மணம் கந்தருவ மணத்தை ஒருபுடை ஒத்தும் பிறிதொரு வகையில் வேறுபட்டும் நிற்பதை விளக்கவே களிறுதரு புணர்ச்சிக்குப் பின்னரும் கதை நீள்கிறது. தமிழர் களவு அறவழிப்பட்டது என்பதை ஆழ உணர்த்தவே குறிஞ்சிப் பாட்டு அறத்தொடு நிற்றலில் நிறைவு பெறுகிறது.

## ஆளுமையும் ஆற்றலும்:

ஆற்றல் மிக்க இலக்கியம் என்பது அது படைக்கப்பெற்ற காலத்தில் மட்டுமில்லாமல் பின்வரும் காலங்களிலும் தன் ஆளுமையை வெளிப்படுத்தி நிற்கிறது. இச்சிறப்பு கபிலர் பாடல்களுக்கு உண்டு.

இவ்விடத்து இம்மொழி இவர்க்கு உரியதென்று அவ்விடத்து அவரவர்க்கு உரைப்பது முன்னம் என்பர் தொல்காப்பியர். அஃதாவது

இடம், மொழி, கேட்போர், கூறுவோர் இவையெல்லாம் உணர்ந்து குறிப்பறிந்து மொழிதல் முன்னமாகும். ஆனால் கபிலரோ,

*"முன்னத்திற் காட்டுதல் அல்லது தான்உற்ற*
*நோய் உரைக்கல்லான் ......"* (குறிஞ். கலி. 1:4-5)

என்கிறார். இதுதான் சங்கப்பாடலின் அகநாகரிகமாகும். புறமாக இருந்தால் முன்னம் மொழிதலில் சிறப்பு; அகமாக இருந்தாலோ முன்னம்-குறிப்பு முன்னமாகவே உணர்த்தல் தான் சிறப்பு என்ற கபிலரின் கவிதை நெறி பாலை பாடிய பெருங்கடுங்கோவையும் ஆட்கொண்டது. கபிலர் முன்னத்தைக் குறிஞ்சியிற் காட்ட பெருங்கடுங்கோ பாலையில் காட்டுகின்றார்.

*"முன்னம் காட்டி முகத்தின் உரையா*
*ஓவச்செய்தியின் ஒன்று நினைந்து ஒற்றி"* (அகம்.5)

எனக் குறிப்பிடுகின்றார்.

குரங்குக் குட்டி தாவி மேலிருந்த போது வளையும் மூங்கில், அது அகன்றதும் மீனெறி தூண்டிலாய் நிமிரும் நாடன் நட்பால் என் நலன் தொலைந்தது (ஐங்.278) என்கிறாள் கபிலரின் தலைவி. காட்டியானை இழுத்துவிட்ட மூங்கில் மீனெறி தூண்டிலாய் நிமிரும் கானக நாடன் நட்பால் என்நலன் தொலைந்தது (குறுந். 54) எனத் தலைவி நிலை பற்றிப் பேசுகின்றார் மீனெறி தூண்டிலார்.

குரங்குக் குட்டி மேலிருந்த மூங்கில், வளைந்து வளைந்து ஆடும். காட்டியானை பற்றிய மூங்கில் அவ்வியானையின் விருப்பம் போல் வளையும். இவ்விரு குறிப்புக்களே இப்பாடல்களை வேறுபடுத்தி நிற்கின்றன.

கபிலரின் பல்துறை அறிவு அவர்தம் பாடலுக்குச் செறிவூட்டியிருப்பதோடு சமகாலப் புலவர்களிடத்தும் பிந்தைய புலவர்களிடத்தும் மிகுந்த செல்வாக்குச் செலுத்தியுள்ளது. இயற்கை திரிந்தாலும் வளம் திரியாதது பாரியின் நாடு என்ற கபிலரின் கருத்திற்கு அவர்தம் வானியல் அறிவு மிகுந்த வலுவூட்டியுள்ளது.

*"மைம்மீன் புகையினுந் தூமந் தோன்றினும்*
*தென்றிசை மருங்கின் வெள்ளி யோடினும்*
*வயலக நிறையப் புதற்பூ மலர*

... ....

*பெயல்பிழைப் பறியாப் புன்புலத் ததுவே"* (புறம்.117)

எனப் பாரியின் நாடு கபிலரால் நினைவுகூரப்பெறுகிறது. சனி புகைதலாவது இடபம், சிங்கம், மீனம் இவற்றொடு மாறுபடுதல்; இவற்றுள் சனி தனக்குப் பகைவீடாகிய சிங்க ராசியிற் புகின் உலகிற்குப் பெருந்தீங்கு விளைவிப்பன் என்று இதனை விளக்குகின்றார் உவே.சா. வெள்ளிக் கோல் தென்திசை எழுந்தால் மழை பெய்யாது. ஆனால் அச்சூழலிலும் பறம்புநாடு வளம் குன்றாத வளமுடையது என்கிறார் கபிலர்.

கபிலரின் வான்மீன் பற்றிய கருத்துச் செல்வாக்கை புறம் 395 ஆம் பாடல் விளக்கி நிற்கிறது. வெள்ளிக்கோல் தெற்கேதலை "இலங்கு கதிர் வெள்ளி தென்புலம் படரினும்" (புறம்.35) என்றும்,

*"வெள்ளி தென்புலத் துறைய விளைவயற்*
*பள்ளம் வாடிய பயனில் காலை"* (புறம்.388)

என்றும் பல புறப்பாடல்கள் பேசுகின்றன. பட்டினப் பாலையிலும் வெள்ளிக்கோல் தெற்கேதல் பற்றிய கபிலரின் கருத்துச் செல்வாக்கை அறியலாம்.

மைம்மீன் புகைதல் புகைக்கொடி தோன்றுதல் வெள்ளிக்கோன் தெற்கேதல் பற்றிய கபிலரின் கருத்துக்களை அதே முறைவைப்பில் எடுத்தாள்கிறார் இளங்கோவடிகள். இதனை,

*"கரியவன் புகையினும் புகைக்கொடி தோன்றினும்*
*விரிகதிர் வெள்ளி தென்புலம் படரினும்"* (சிலம்பு.10:102-103)

என்ற அடிகள் விளக்கும்.

கபிலர் படைத்துக் காட்டும் தலைவியின் உள்ளத்து எழுச்சி வேகத்தை வள்ளுவர் பாடல்களிலும் காணமுடிகின்றது.

*"ஒரு நாள் விழுமம் உறினும் வழிநாள்*
*வாழ்குவள் அல்லள்"* (அகம்.18)

எனத் தலைவியின் உள்ளத்தை எடுத்துரைக்கின்றாள் கபிலரின் தோழி.

*"செல்லாமை உண்டேல் எனக்குரை, மற்றுநின்*
*வல்லரவு வாழ்வார்க் குரை"* (குறள்.1151)

என்கிறாள் வள்ளுவர் படைத்துக் காட்டும் தலைவி.

கபிலரின் அகப்பாடற் சிந்தனைகள் பக்தி இலக்கியக் காலத்து மெய்யுணர்வுப் பாடல்களுக்கு அடிப்படையாய் அமைந்தன. கபிலர் காட்டும் தலைமக்களின் அகவோர்மை இறைவன் அடியார் அகவோர்மைக்கு முன்மாதிரியாக அமைந்தது.

*"பெருவரை யன்ன திருவிறல் வியன்மார்பு*
*முயங்காது கழிந்த நாள் இவள்*
*மயங்கிதழ் மழைக்கண் கலிழும் அன்னாய்"* (ஐங்.220)

என்ற தலைவியின் மனஉணர்வை ஆழ்வார் பாடல்களிலும் காணமுடிகின்றது.

*"ஒன்றிய திங்களைக் காட்டி*
*'ஒளிமணி வண்ணனே' என்னும்*
*நின்றகுன் றத்தினை நோக்கி*
*'நெடுமாலே! வா' என்று கூவும்*
*நன்றுபெய் யும்மழை காணில்*
*'நாரணன் வந்தான்' என்றாலும்"* (நா.தி.பி.2450)

என்கிறார் நம்மாழ்வார்.

கபிலரின் கருத்துக்களைக் கம்பர் கையாண்ட இடங்கள் பல. அவர்தம் ஆற்றல் மிக்க உவமைகள் மகாகவி கம்பரையும் ஆட்கொண்டதில் வியப்பில்லை.

*" மாயிரு விசும்பிற் பன்மீன் ஒளிகெட*
*ஞாயிறு தோன்றி யாங்கு, மாற்றோர்*
*உறுமுரண் சிதைத்த நின் நோன்தாள் வாழ்த்தி"*
(பதிற்.64:12-14)

எனச் செல்வக்கடுங்கோ வாழியாதனை வாழ்த்துகின்றார் கபிலர். இவ்வாழ்த்து முறையைப் பரதன் பாத்திரப்படைப்பிற்குப் பயன்படுத்திக் கொள்கிறார் கம்பர்.

*"என்புகழ் கின்ற தேழை*
*எயினனேன் இரவி என்பான்*
*தன்புகழ்க் கற்றை மற்றை*
*ஒளிகளைத் தவிர்க்கு மாபோல்*
*மன்புகழ் பெருமை நுங்கள்*
*மரபினோர் புகழ்கள் எல்லாம்*
*உன்புகழ் ஆக்கிக் கொண்டாய்*
*உயிர்குணத் துரவுத் தோளாய்"* (க.இரா.2338)

என்பதால் இதனை அறியலாம்.

*"நீயும் தவறிலை; நின்னைப் புறங்கடைப்*
*போதர விட்ட நுமரும் தவறிலர்*

*நிறைஅழி கொல்யானை நீர்க்கு விட்டாங்குப்*
*'பறை அறைந்தல்லது செல்லற்க' என்னா*
*இறையே தவறுடை யான்''* (கலி.20:30-34)

என்ற கலித்தொகைப் பாடலின் சாயலை, இராமனைக் காணவரும் பரதனைக் கண்டு வெகுளும் இலக்குவனுக்கு, பதில் சொல்லும் இராமன் மொழிகளில் காணலாம்.

*''நதியின் பிழை அன்று நறும் புனல் இன்மை அற்றே*
*பதியின் பிழை அன்று நமைப் புரந்தாள்*
*மதியின் பிழை அன்று மகன் பிழை அன்று; மைந்த*
*விதியின் பிழை, நீ இதற்கு என்னை வெகுண்டது என்றான்''*
(க.இரா.1734)

என்கிறார் கம்பர்.

பாவேந்தர் பாரதிதாசன் பாடல்களில் கபிலர் பாடல்களின் செல்வாக்கு மிகுதி. கபிலரின் சொற்கள், கருத்து விவரிப்பு முறை, காட்சி விளக்கம் முதலியன பாவேந்தரின் கவிதைகளில் மிகுந்து காணப்பெறுகின்றன.

தினைகாக்கும் பரண் மேலுள்ள குறவனது கொள்ளிக் கட்டைக்கு அஞ்சிய யானை பின்னர் வானத்து விண்மீன் ஒளியையும் கொள்ளிக்கட்டையின் ஒளியாக எண்ணி அஞ்சும் மலைக்காட்சியைக் கபிலர் படைத்துக் காட்டுகின்றார்.

*''ஞெகிழியின் பெயர்ந்த நெடுநல் யானை*
*மீன்படு சுடர்ஒளி வெரூஉம்''* (குறுந். 357)

என்ற கபிலரின் காட்சிச் சித்திரிப்பு பாவேந்தர் கவிதையில்,

*''கிளையினிற் பாம்பு தொங்க*
*விழுதென்று குரங்கு தொட்டு*
...
*கிளைதோறும் குதித்துத் தாவிக்*
*கீழுள்ள விழுதை யெல்லாம்*
*ஒளிப்பாம்பாய் எண்ணி எண்ணி*
*உச்சிபோய்த் தன்வால் பார்க்கும்.''* (அழகின் சிரிப்பு,ப.26)

என இடம் பெற்றுள்ளது. யானை மேலேயும் குரங்கு கீழேயும் பார்ப்பது தான் இவ்விரு பாடல்களுக்கு இடையே காணும் வேறுபாடாகும்.

கபிலரின் கருத்து விவரிப்புப் போலவே பாவேந்தரின் கருத்து விவ்ரிப்பும் அமைவதால் கவிதை அனுபவ அறிவின் களஞ்சியமாகத் திகழ்கிறது.

*"பொருள் இல்லான் இளமைபோல் புல்லென்றாள் வைகறை*
*அருள்வல்லான் ஆக்கம்போல் அணிபெறும்..."*

(கலி.2:2:15-16)

என்றும்

*"அறம்சாரான் மூப்பேபோல் அழிதக்காள், வைகறை*
*திறன்சேர்ந்தான் ஆக்கம்போல் திருத்தகும்"* (கலி.2:19-20)

என்றும்தலைவியின் மன உணர்வைச் சித்திரிக்கின்றார் கபிலர். மழை பெய்ததைப் பாவேந்தர் விளக்கும் முறையில் கபிலரின் கருத்துச் செல்வாக்கையும் விவரிப்பு முறையையும் காணமுடிகின்றன.

*"கேள்விஇலார் நெஞ்சம்போல் இருண்டு நீளும்*
*வழக்குடையார் செல்வம்போல் மின்னி மாய்ந்து*
*வண்பொருளை இழந்தான்போல் அதிர்ந்து பின்னர்*
*மழைக்கண்ணீர் உகுத்தது வான்!"* (பாண்டியன் பரிசு, ப.92)

என்கிறார்.

கபிலரின் கருத்து வன்மை புதிய கவிதைகளிலும் செல்வாக்குச் செலுத்தி வருவதைக் காண முடிகின்றது. இதற்குக் காரணம் அவர்தம் நுட்பமான உச்சமான உணர்ச்சி வெளிப்பாடுகளே என்றால் அதில் மிகையில்லை.

*"இட்டருங் கண்ண படுகுழி இயவின்*
*இருளிடை மிதிப்புழி நோக்கி அவர்*
*தளர்அடி தாங்கிய சென்றது இன்றே"* (அகம்.128)

எனத் தலைவியின் நெஞ்சம் தளர்அடி தாங்கச் செல்கின்றது. ஆனால் புதிய கவிதையில் ஒரு மாற்றம், தலைவனின் நெஞ்சம் தலைவியின் அடிகள் நோக்கிச் செல்கின்றது.

*"நீ*
*நடந்து செல்லும் பாதைகளில்*
*நெருஞ்சி முட்கள் கிடக்கலாம்*
*ஆனால்*
*அவை*

*உன் கால்களில் குத்தாது*
*ஏனென்றால்*
*என் மெல்லிய இதயம்*
*அங்கே*
*படுத்திருக்கிறது.''*

என்பதால் இதனை அறியலாம்.

**முடிவுகள்:**

கபிலர் உவமையில் முரணமைத்துப் பாடற் பொருளை மனத்தில் ஆழப் பதித்துள்ளார்.

ஒப்பீட்டில் இணைவே முரணாக அமைந்தும் பாடல் சிறந்துள்ளது.

உலக நம்பிக்கைகளுக்கு மாறான கருத்துச் சித்திரிப்பே இவர்தம் கவிதை அழகியலாகவும் உள்ளது.

அகப்பாடலில் செய்தியைக் கவிதையாக்கப் புறக்காட்சியை கண்முன் சித்திரப்படுத்துகின்றார்.

எதார்த்த உவமைகள், எதார்த்தம் மீறிய உவமைகள், உவமையே பாடலின் இதயம் எனப் பல நிலையில் இவர் பாடல்களில் உவமை பயன்படுத்தப் பெற்றுள்ளது.

கபிலரின் அகப்பாடலும் புறப்பாடலும் சொல்லும் முறையாலும் வேறுபட்டு நின்கின்றன.

செய்திக்குள் செய்தி, செய்தியை ஆழப்பதித்தல், பாடலின் சிறு அலகும் செம்மையாய் ஆளப் பெறுதல் இவர்தம் பாடலாக்க முறைகளுள் குறிப்பிடத்தக்கவையாகும்.

தொல்காப்பிய அழகியல் இவர் பாடலுக்கு வலுச் சேர்ந்துள்ளது.இவர் பாடலால் தொல்காப்பிய அழகியலும் விளக்கம் பெறுகின்றது.

கபிலரின் கவிதை ஆளுமை நூற்றாண்டுகளை வெற்றி கொள்ளும் ஆற்றல்மிக்கதாகும்.

# எல்லோர்க்கும் தொல்காப்பியம்
# எழுத்ததிகாரம்
# நூல்மரபு

பேரறிஞர் நா. பாலுசாமி

**குறிப்பு :** கல்வியறிவு மிகுதியும் இல்லாத எல்லாத் தமிழரும் புரிந்து கொள்ளும் வகையில் எளிய உரைவிளக்கத்துடன் தொல்காப்பிய எழுத்ததிகாரம் எழுதப்படுகிறது. தொல்லியம் என்னும் பழைய இலக்கணநூல் எட்டாக்கனியாக இல்லாமல், யாவரும் சுவைக்கும் வகையில் செய்திகள் தரப்பட்டுள்ளன. மாணவர்க்கும் மற்றையோர்க்கும் பயன்படும் முறையில் சூத்திரக் கருத்துக்கள் விளக்கப்பட்டுள்ளன.

## 1. நூல்மரபு

(எழுத்துக்களின் வகை)

***சூத்திரம் 1***

*எழுத்தெனப் படுவ*
*அகரம் முதல் னகர இறுவாய்*
*முப்ப.:து என்ப;*
*சார்ந்துவரல் மரபின் மூன்று அலங்கடையே.*

**(பதவுரை)**

சார்ந்து வரல் மரபின் - தனித்து இயங்காமல்

பிற எழுத்துக்களைச் சார்ந்தே வரத்தக்க இயல்பினை உடைய, மூன்று - இ, உ, ஃ ஆகிய மூன்று எழுத்துக்கள், அல் அம் கடை - அல்லாத இடத்து,

எழுத்து எனப்படுவ-எழுத்துக்கள் என்று சிறப்பித்துக் கூறப்படுவன, அகரம்முதல் - 'அ' முதல், னகரம் இறுவாய் - 'ன்' முடிய முப்பஃது என்ப-முப்பது எழுத்துக்கள் என்பர் இலக்கணப் புலவர்.

**(பொழிப்புரை)**

சார்ந்துவரும் எழுத்துக்களாகிய இ, உ, ஃ - என்பன ஒழிந்த அ-ன் வரை உள்ள எழுத்துக்கள் முப்பது என்று கூறுவர் இலக்கணஆசிரியர்.

**(விளக்கவுரை)**

தமிழில் வழங்கும் மொத்த எழுத்துக்கள் 33. அவற்றுள் உயிர்எழுத்து 12; மெய்யெழுத்து18; சார்பெழுத்து 3. உயிரும் மெய்யும்

முதல் எழுத்துக்கள்; இ,உ,ஃ சார்ந்துவரும்போது சார்பெழுத்துக்கள். இ,உ இரண்டும் உயிரெழுத்துக்களே. ஆனால் சில இடங்களில் பிற எழுத்துக்களை ஆதாரமாகக் கொண்டு வரும் போது சார்பெழுத்துக்கள் எனப்படும்.

**(எடுத்துக்காட்டு)**

உயிர் எழுத்துக்கள் 12; அ ஆ இ ஈ உ ஊ எ ஏ ஐ ஒ ஓ ஔ; மெய்யெழுத்துக்கள் 18: க் ங் ச் ஞ் ட் ண் த் ந் ப் ம் ய் ர் ல் வ் ழ் ள் ற் ன். மெய்யெழுத்து, புள்ளியெழுத்து, உடம்பெழுத்து இம்மூன்றும் ஒரே பொருள் தருவன. உயிரெழுத்து எனவே, புள்ளியெழுத்து உடம்பெழுத்து எனப்பட்டது. உயிர் தனித்து இயங்கும், பிறவற்றை இயக்கும். உடம்பு இயங்காது; உயிர் இயக்க இயங்கும். இதுவே இருவகை எழுத்துக்களுக்கும் உள்ள வேறுபாடு.

சார்ந்து வரல் - முதல் எழுத்துக்களைச் சார்ந்து இயங்குதல், மரபு-தன்மை. நூன் மரபு (நூல் மரபு) நூலினது வரலாறு. நூல் என்பது எழுத்தைக் குறிக்கும். எனவே, நூல்மரபு என்பது எழுத்திலக்கணத்தின் வரலாறு எனப்படும். ஆடைக்கு நூல் உறுப்பு; மொழிக்கு எழுத்து உறுப்பு. நூல்-எழுத்து. அதிகாரம்-இயல்; அதிகரித்தல், வளர்தல். எழுத்துக்கள் பெருகிவரும் வரலாறு அதிகாரம் எனப்பட்டது.

***சூத்திரம் 2:***

## சார்பெழுத்துக்கள்

*அவைதாம்,*
*குற்றியல் இகரம் குற்றியல் உகரம்*
*ஆய்தம் என்ற*
*முப்பால் புள்ளியும் எழுத்தோ ரன்ன.*

(ப-ரை) அவைதாம் - மேலே சார்ந்துவருவன எனப்படுபவை, குற்றியல் இகரம்-தன்மாத்திரையில் குறுகி ஒலிக்கும் இகரம், குற்றியல் உகரம்- தன்மாத்திரையில் குறுகி ஒலிக்கும் உகரம், ஆய்தம்-ஆய்தம் என்று கூறப்படும், முப்பால் புள்ளியும்-மூன்று புள்ளிகளை வடிவமாக உடையதும் ஆகிய மூன்றும், எழுத்து ஓரன்ன-முற்கூறிய எழுத்துக்கள் போன்றவையே.

(பொ-ரை) தமக்கு உரிய ஒரு மாத்திரையில் குறுகி ஒலிக்கும் போது, இ,உ,ஆகிய இரண்டு உயிர்க்குற்றெழுத்துக்கள் குற்றியலிகரம்

குற்றியலுகரம் எனப்படும். ஆய்தம் மூன்று புள்ளிகளை வடிவமாக உடையது (ஃ) புள்ளி- சுண்ணம் (ஃ).

(வி-ரை) முப்பால் - மூன்று பகுதிகள். புள்ளி-புள்ளியிட்ட எழுத்து(க்,ச்) போன்றவை, ஓரன்ன - முற்கூறிய முதல் எழுத்துக்களைப் போன்றவை. ஆய்தம் என எழுது; ஆயுதம் என எழுதக்கூடாது. ஆயுதம் ஒரு கருவியாகிவிடும்.

(எ-டு) நாடு+யாது= நாடியாது. இதில் இறுதிஎழுத்தாகிய 'டு' என்பதில் உள்ள 'உ', 'இ' யாகமாறி (ட்+இ) 'டி' ஆகி நாடியாது என வந்துள்ளது. விளக்கம் பின்வரும் தனிச் சூத்திரத்தில் விளக்கப்படும். இது குற்றியலிகரம்.

நாடு, காசு, பயறு-இவற்றில் ஈற்றில் உள்ள டு,சு,று ஆகியவற்றின் மேல் ஊர்ந்துள்ள 'உ' என்பது தன் ஒரு மாத்திரையில் குறுகி ஒலிப்பதால் குற்றியலுகரம், கஃது, அஃது-இவற்றில் இடையில் உள்ள ஃ என்னும் ஆய்தம் மெய்யெழுத்துப் போல் அரைமாத்திரை ஒலிப்பதாலும் முன்னும் பின்னும் எழுத்துக்களைப் பெற்று இடையில் மட்டும் வருவதால் சார்பெழுத்து எனப்பட்டது.

*சூத்திரம் 3*

## குற்றெழுத்து

*அவற்றுள்,*
*அ இ உ எ ஒ என்னும்*
*அப்பால் ஐந்தும்*
*ஓரளபு இசைக்கும் குற்றெழுத்து என்ப.*

(ப-ரை) அவற்றுள் - மேலே கூறப்பட்ட முப்பது எழுத்துக்களுள், அ-இ-உ-எ-ஒ என்னும் - அ இ உ எ ஒ என்கிற, அ பால் ஐந்தும்- அப்பகுதிகள் (எழுத்துக்கள்) ஐந்தும், ஓரளபு-ஒரு மாத்திரை, இசைக்கும் - ஒலிக்கும், குற்றெழுத்து என்ப - குற்றெழுத்து என்று கூறுவர் இலக்கணப் புலவர்.

(பொ-ரை) அ,இ,உ,எ,ஒ- இவை ஐந்தும் ஒரு மாத்திரை அளபு ஒலிக்கும் குற்றெழுத்துக்களாம்

(வி-ரை) குறுகிய ஓசையுள்ள எழுத்து குற்றெழுத்து; உயிர்கள் பன்னிரண்டனுள் இவை ஐந்தும் குறில்களாம்; உயிர்க்குறில்கள் எனவும் கூறப்படும்.

# பிற்காலச் சோழர்காலத் தமிழ் இலக்கியம் காட்டும் குழந்தைச் சடங்குகள்

பேரறிஞர் தா. ஈசுவரபிள்ளை

## சமுதாயமும் பண்பாடும்

மனிதர்கள் தம் சமுதாய வாழ்க்கையின் ஒவ்வொரு செயலுக்கும் பிறரைச் சார்ந்தே வாழும் நிலையில் காணப்படுகின்றனர். ஆனால், பறவைகள், விலங்குகள் போன்ற பிறஉயிரினங்கள் பிறந்த சில நாட்களிலேயே தம் இன்றியமையா வாழ்க்கைத் தேவைகள் பலவற்றை நிறைவேற்றக் கற்றுக் கொள்கின்றன. எனினும், மனித உயிர்களிடத்தில் காணப்பெறும் சிறப்புக்கூறு பகுத்தறிவைப் பெற்றிருத்தல் ஆகும். இப்பகுத்தறியும் திறனால் மனிதர்கள் குறியீடுகளை உருவாக்கவும் அவற்றைப் பயன்படுத்தவும் ஆற்றல் பெற்றுள்ளனர். இக்குறியீடுகளால் மக்கள் பண்பாட்டையும் படைத்துக் கொள்கின்றனர். புண்பாட்டை உருவாக்கும் குறியீடுகளுள் ஒன்று மொழி ஆகும்.

பண்பாட்டைச் சமுதாய உறுப்பினர்கள் ஒருவரிடமிருந்து மற்றொருவர் கற்றுக் கொள்வதால் அதைச் சமுதாய மரபுரிமை என்பர். சமுதாய உறுப்பினர்கள் தம் சந்ததியினருக்குத் தாம் பின்பற்றும் பண்பாட்டுக் கூறுகளைக் கடத்துவதுடன், சில பண்பாட்டு மரபுகளை விட்டுச் செல்லவும் செய்கின்றனர். இவ்வடிப்படையிலேயே சமுதாயம் என்பதற்குப் பொதுவான பண்பாட்டுக் கூறுகளைக் கொண்ட மக்கட் கூட்டம்(Ronald W. Smith, Sociology-An Introduction, p.19)என்றும், பண்பாட்டை வளர்க்கும் களம் (Dresseller, sociology - The study of Human Interaction, p.33)என்றும் விளக்கங்கள் அளிக்கப்படுகின்றன.

சமுதாயமானது ஓர் அமைப்பாகவும், பண்பாடானது ஓர் அமைக்கப்பட்ட முறையாகவும் (Organised system)விளக்குகின்றன. சமுதாயமும், பண்பாடும் ஒரே கூறின் பிரிக்க முடியாத இரண்டு தன்மைகள் ஆகும். இரண்டும் உட் தொடர்புடையன. ஒன்றையொன்று சார்ந்வையும் ஆகும். பண்பாட்டின் துணையின்றிச் சமுதாயத்தை அறிய முடியாது. பண்பாடற்ற சமுதாயம் நிலைத்து வாழவும் முடியாது.

## பண்பாடு

பண்பாடு என்பது குறித்துச் சமூகவியலாளர்கள் பல்வேறு விளக்கங்களை அளிக்கின்றனர். அவற்றுள் ஒரு சிலவற்றைக் காண்போம்.மக்கள் படைத்துக் கொண்ட கருவிகள், பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள், கொள்கைகள், ஒழுக்கங்கள் முதலியவற்றின் சாராம்சங்களைப் பண்பாடு எனப் பொதுவாகக் கூறலாம். (அ. தட்சிணா மூர்த்தி, தமிழர் நாகரிகமும் பண்பாடும், ப.23) சமுதாயத்திலிருந்து பெறப்படுவதும், அடையாளங்கள், மதிப்புகள், செயல்பாடுகள் ஆகியவற்றைக் கடத்தக் கூடியதும், அவற்றுடன் தொடர்புடையனவற்றை உள்ளடக்கியதும் பண்பாடு எனப்படும். (Theodore Caplow, Sociology, p.55)சமுதாய உறுப்பினர்களால் மேற்கொள்ளப்படும் அறிவுரைகள், நம்பிக்கைகள், கலைகள், ஒழுக்கங்கள், சட்டங்கள், வழக்கங்கள் ஆகியவற்றின் கலவையே பண்பாடு என அழைக்கப்படுகிறது.

இப்பண்பாட்டைப் பல நிலைகளில் பாகுபடுத்தும் சமூகவியலாளர்கள் உருவப் பண்பாடு (Material Culture),அருவப் பண்பாடு (Non Material Culture) என்ற பாகுபாட்டையும் குறிப்பர். வழக்கங்கள், நம்பிக்கைகள், சடங்குகள், சமுதாயத் தடைகள், மதிப்புகள், தொடர்பு வகைகள் முதலானவை அருவப் பண்பாடு என்ற வகைப்பாட்டினுள் அடக்கிக் காட்டப்பெறுகின்றன.

இவ்வகையில் பிற்காலச் சோழர்காலத் தமிழ் இலக்கியங்கள் காட்டும் சடங்குகளுள் குழந்தைச் சடங்குகள் குறித்துக் காணலாம்.

## சடங்குகள்

மக்களின் பிறப்பு முதல் இறப்பு வரை மேற்கொள்ளப்பெறும் பல்வேறு சடங்குகளும் சமுதாயத்தில் பண்பாட்டைப் பறை சாற்றுவனவாய் அமைகின்றன. பண்பாட்டின் ஒரு கூறாகிய சடங்குகள் மற்றொரு கூறாகிய நம்பிக்கையின் அடிப்படையில் நடைபெறுவன ஆகும்.

## குழந்தைச் சடங்குகள்

சமுதாயத்தின் புதிய உறுப்பினராகப் பிறக்கும் குழந்தையின் பரிணாம வளர்ச்சி நிலையின் பல்வேறு கால கட்டங்களில் பல சடங்குகள் மேற்கொள்ளப்படுகின்றன. அவற்றுள் சிலவற்றைப் பிற்காலச் சோழர்காலத் தமிழ் இலக்கியங்கள் புலப்படுத்துகின்றன.

### தானம் செய்தல்

குழந்தை பிறந்த மகிழ்ச்சியில் பொன் முதலான பொருள்களைத் தானம் செய்யும் மரபு காட்டப்படுகின்றது. (பெரியபுராண: திருஞான:30:1). சிவனடியார்க்குத் திருவமுது படைக்கப்படுகின்றது. (பெரிய.திருஞான. 38:2) தசரதன் தனக்குக் குழந்தை பிறந்ததும் நதியில் நீராடிச் செல்வங்களைத் தானம் செய்கின்றான். (கம்ப. பால. 5:111) தசரதனுக்குக் குழந்தை பிறந்த செய்தியைக் கேட்டு நகர மாந்தர்களும் செய்தியைக் கூறியவர்களுக்குப் பொருட்களைத் தானமாகக் கொடுக்கின்றனர் (கம்ப.பால.5:116) மானக்கஞ்சாறர் குழந்தை பிறந்ததும் மங்கல வாத்தியம் ஒலிக்கத் தானம் செய்கின்றார். (பெரிய: மானக்கஞ்சாறர்:12:1-2).

### மாளிகைகளை அழகு செய்தல்

குழந்தை பிறந்த செய்தியைக் கேட்டு மகிழ்வுடன் மாளிகைகளை அழகு செய்யும் நிலை காட்டப்படுகின்றது. (பெரிய. திருஞான. 33:3-4) திருஞானசம்பந்தர் பிறந்ததும் மகளிர் தம்மிற் கலந்த பெருமகிழ்ச்சியுடன் சாயலையுடைய மயில் போன்று, தூய அழகிய விளக்குகளுடன் குழை முதலிய அணிகலன்கள் மின்ன மாளிகைகளை அழகு செய்கின்றனர் (பெரிய. திருஞான. 36)

### மன்னர் ஆணையிடல்

மன்னர்கள் தமக்குக் குழந்தை பிறந்ததும் பகை மன்னர்களைச் சிறைவீடு செய்யவும், தெய்வங்களுக்கு விழாக்கள் எடுக்கவும், தேவாலயங்களைப் புதுப்பிக்கவும், அந்தணர்ச் சாலைகளை ஏற்படுத்தவும், ஏழு வருடங்கள் வரி நீக்கம் செய்யவும், நிதிச் சாலைகளின் கதவுகளைத் திறக்கவும் ஆணையிடுகின்றமையைக் கம்பராமாயணம் காட்டுகின்றது. (கம்ப. பால. 5:112-113)

### காப்பிடல்

கண்ணப்பர் பிறந்ததும் அவர் தந்தை கடவுட் சார்பாகத் தம் மரபில் வந்த குற்றமற்ற பழைய வழக்கங்களுக்கேற்பப் பொருந்துவனவற்றைச் செய்கின்றார். (பெரிய. கண்ணப்பர். 18:1-2). குழந்தையின் கைகளிலும் கால்களிலும் இரும்பு கலந்த கலன்களை அணிவிக்கின்றனர். இளம் தளிர்களைச் சூட்டி, மலை வேப்பங் கொட்டைகளை ஒழுங்குபடுத்தி இடையிடையே கோத்த, அரையில் தரிக்கும் பலகறை மணிக்கோவையைக் கட்டுகின்றனர். இதனால் கொசு முதலியனவற்றால் நோய்கள் அணுகாது காக்கலாம் என்று நம்பிய நம்பிக்கை

வெளிப்படுகின்றது. குலோத்துங்கன் பிறந்ததும் அவனுக்கு ஐம்படைத் தாலியைக் காப்பாக அணிவிக்கின்றனர். (கலிங்கத்துப்பரணி. 239)

### சாதகம் எழுதுதல்

குழந்தை பிறந்ததும் கணியை அழைத்துச் சாதகம் எழுதும் சடங்கு நடத்தப்படுகின்றது. (சிந்தாமணி:நாமகள்:279:1-2) விமலை பிறந்ததும் பிறந்த குறிப்பு எழுதுகின்றனர். (சிந்தா: விமலை:88:1-2). தசரதனுக்குக் குழந்தை பிறந்ததும் சோதிடம் வல்லவர்கள் கோள்களின் பயன்களை ஆராய்கின்றனர். (கம்ப. பால. 5:108-109)

### ஏழு நாட்கள் சடங்கு

குழந்தை பிறந்த ஏழு நாட்களும் சுண்ண நெய் விழா, நான நீராட்டு விழா, சுத்தி செய்யும் சடங்கு முதலியன செய்யப்படும் நிலை காட்டப்படுகின்றது. (சூளாமணி. 1718)

### பத்து நாட்கள் சடங்கு

சில பிரிவினரிடம் குழந்தை பிறந்ததும் பத்து நாட்கள் சடங்குகள் செய்யப்படும் நிலை உள்ளமையையும் காட்டப்படுகின்றது. சிறுத்தொண்டர் மகன் பிறந்ததும் தங்கள்மரபுரிமைச் சடங்குகளைப் பத்து நாட்களும் செய்கின்றார்.(பெரிய. சிறுத் தொண்டர். 19:3-4). சிவநேசரும் குழந்தை பிறந்ததும் பத்து நாட்கள் சடங்குகள் செய்கின்றனர். (பெரிய. திருஞான.1043:3)

### பெயரிடும் சடங்கு

இது சைவர்களுக்குரிய பதினாறு சடங்குகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது. (பெரிய. தடுத்தாட்.4:2). இச்சடங்கு நாமகரணம் என்ற பெயராலும் அழைக்கப்படுகிறது. (பெரிய. தடுத்தாட். 4:2, சூளாமணி. 1723). கந்துக்கடனும் அவன் மனைவியும் பெரியோர்களும் கூடிக் குழந்தைக்குச் சீவகன் எனப் பெயரிடுகின்றனர். (சிந்தா. நாமகள்.322). இச்சடங்கு குழந்தை பிறந்த பன்னிரண்டாவது நாளில் நடத்தப்பெறும் எனக்கருதலாம். ஆனால் பதினாறாம் நாளில் தசரதன் நாமகரணச் சடங்கு செய்தமையைக் கம்பராமாயணம் காட்டுகின்றது. (கம்ப.பால.5:118). இதைப் போன்று கண்ணப்பர், ஆரூரர், பரவையார், சம்பந்தர், பூம்பாவை முதலியோர்க்கும் பெயரிடும் சடங்கு நடத்தப்பெறுவதைப் பெரியபுராணம் காட்டுகின்றது. (பெரிய. கண்ணப்பர். 17:1-2, தடுத்தாட்.3:2, 4:2,132,திருஞான. 41:1, 1044:3-4)

**நெய்யாடல்**

குழந்தை பிறந்ததும் நடத்தப்பெறும் சடங்குகளில் ஒன்று நெய்யாடல் விழா. (பெரிய. கழற்றறிவார்.6) சிறுத்தொண்டர் தமக்கு மகன் பிறந்ததும் நெய்யாடல் விழா எடுக்கின்றனர். (பெரிய. சிறுத்தொண்டர். 18:4) சம்பந்தருக்கும் நெய்யணி விழா எடுக்கப்படுவதைக் காணலாம். (பெரிய. திருஞான. 35)

**பருவச் சடங்குகள்**

பிறந்த குழந்தையின் பல்வேறு வளர்ச்சி நிலைகளின் போது பல்வேறு சடங்குகள் நடத்தப்பெறும் நிலையும் காட்டப்பெறுகின்றது. கண்ணப்பர் வளர்கின்ற ஒவ்வொரு பருவத்திலும் திருவிழாக்களுடன் தெய்வங்களுக்குப் பெருமடைகள் கொடுத்துச் சிறப்பு நடத்துகின்றனர்.(பெரிய. கண்ணப்பர்,19) சிவநேசர் குழந்தைக்கு மாதம் தோறும் செய்கின்ற சடங்குகளைச் சிறப்புறச் செய்கின்றார். (பெரிய.திருஞான. 1045)

குழந்தைக்குப் பெயரிடும் சடங்கு நிறைவுற்ற பின் தொட்டிலில் அமரச் செய்யும் சடங்கு நிகழ்த்தப் பெறுகின்றது. (பெரிய. திருஞான. 41:4) இது குழந்தை பிறந்து முதல் மாதம் நடைபெறும் சடங்கு ஆகும். மூன்றாம் மாதம் உணவு கொடுக்கும் சடங்கு நிகழ்த்தப்படுகின்றது. கண்ணப்பர் பிறந்து ஓர் ஆண்டு நிறைவுற்றதும் தலையில் புலி நகச் சுட்டி சார்த்துகின்றனர். (பெரிய. கண்ணப்பர். 20:2) குழந்தையின் மூன்றாம் ஆண்டில் மயிர் நீக்கும் சடங்காகிய மங்கலவினை நடத்தப்படுகின்றது. மருணீக்கியாருக்குத் தலை மயிரை நீக்குதலாகிய சௌளம் என்ற சடங்கு மகிழ்வுடன் நடத்தப்படுகின்றது. இதுவும் சைவர்க்குரிய பதினாறு சடங்குகளில் ஒன்றாகும். சிறுத்தொண்டர் மகனுக்கும்(பெரிய. சிறுத்தொண்டர். 22:1), தசரதன் குழந்தைகளுக்கும் (கம்ப. பால.5:126:1-2) இச்சடங்கு நடத்தப்படுகின்றது. பின் முந்நூலணியும் கலியாணம் என்ற சடங்கு (பெரிய. தடுத்தாட். 6:2-3) நடத்தப்படுகின்றது.

**கலை பயில் சடங்கு**

குழந்தைகளுக்குக் கலைகளைப் பயில்விக்கத் தொடங்கும்போது அந்நிகழ்ச்சியை விழாவாகக் கொண்டாடுகின்றனர். கண்ணப்பருக்கு விற் பயிற்சி பயிற்றுவிக்க வில் விழா கொண்டாடுகின்றனர். (பெரிய. கண்ணப்பர் 36) இவ்விழா ஏழு நாட்கள் நடைபெறுகின்றது. ஏழாம் நாள்

கண்ணப்பர் வில் பிடிக்கின்றார்(பெரிய.கண்ணப்பர்.39) அப்போது தேவராட்டி காடு பலியூட்டி, கண்ணப்பர் பக்கம் சென்று நெற்றியில் அர்ச்சனை சார்த்தி வாழ்த்துகிறாள். (பெரிய. கண்ணப்பர்.66) குழந்தைக்குக் கல்வி பயிற்றுவிக்கும் போது மேற்கொள்ளும் சடங்கைப் பள்ளியில் வைக்கும் சடங்கு என அழைப்பர் (பெரிய.கண்ணப்பர்.6:2-3) மருணீக்கியாருக்கும் கலை பயில் சடங்கு நடத்தப்படுகின்றது. (பெரிய. திருநாவுக். 20:3-4)

**உபநயனச் சடங்கு**

இது குழந்தையின் பத்தாவது வயதில் நடத்தப்பெறும் எனக் கருதலாம். திருஞான சம்பந்தருக்கு உபநயனச் சடங்குகளைத் தேவர்கள் போன்ற மறையவர்கள் நடத்துகின்றனர். (பெரிய. திருஞான.263:3-4) இதைப் பிரம்ம ஞானம் என்ற சிவஞானத்தைப் பெறும் சடங்கு எனக் கருதுவர்.

இவ்வாறு பிற்காலச் சோழர்கால இலக்கியங்கள் சமுதாய மக்களிடையே பொதுவாகக் காணப்பட்ட குழந்தைச் சடங்குகளையும் குறிப்பிட்ட பிரிவினரிடையே காணப்பட்ட சடங்குகளையும் சுட்டுவதன் மூலம் அக்காலச் சமுதாயத்தில் காணப்பட்ட பண்பாட்டை அறியத் துணை நிற்கின்றன எனலாம்.

# நரிவிருத்த ஆராய்ச்சி

பண்டித. இராமசுப்பிரமணியநாவலர்

## தோற்றுவாய்

நாவன்மைமிக்க புலவர்கள் எஞ்ஞான்றும் உலகிடைத்தோன்றி, மக்கட்கு இன்றியமையாத நன்னெறிகளைப் புலப்படுத்துச் செல்கின்றனர். நன்னெறிகளைக் கதைகளோடு பொருத்திக்கூறுத லொன்று, அவைதம்மைத் தனித்தனி கூறுதலொன்று: என்னும் இவையிரண்டும் அவர்களாற்றழுவப்படுமென்க. கதைகளின்வாயிலாக நெறிகளைப் புகட்டுமிடத்து, அவை, யாவருள்ளத்தும் பசுமரத்தாணிபோற் பதிவன; அஃதேயுமன்றித் தீதின்றீமையும் நல்லதன் நன்மையும் வகுத்துணர்ந்து மக்கள் நன்னெறிக்கண் ஒழுகுதற்குப் பெரிதுந் துணைபுரிவனவுமாகும்.

'நரிவிருத்தம்' என்பது கதைதழுவி நன்னெறிகளைப் புலப்படுத்திவரும் ஐம்பத்திரண்டுபாடல்களையுடையதொரு சிறு நூலேனும்,அது தன்னுட்கொண்டு இலங்கும் நீதிகள் மிக அருமைவாய்ந்தனவும் சிறப்புடையனவுமாம். எனினும், இந்நூலை இக்காலத்து மாணவர்கள் பெரிதும் கடைப்பிடித்துப் பயில்கின்றிலர். அங்ஙனம் பயிலாமைக்குக் காரணம், - நூல் அரிதிற் கிடைத்தல், நூலின்கட்போந்த கதைகள் பயிலாமை, நூல் அருகசமயக் கோட்பாடுடைத்தாதல் முதலியனவாம், நூல் யாரால் இயற்றப்படினும், நீதிகள் யாவர்க்கும் பொது வாகலான், நாலடியார் சிந்தாமணி மணிமேகலை முதலிய பிறசமயநூல்களைப் பயில்வதுபோன்று இந்நூலும் பிறசமயத்தாராற் பயிலத்தக்கதாகும் என்பது அறிவுடையார்க்கு மறுதலையாகாது.

### நூலாசிரியர்

இந்த நூலாசிரியர், ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றான சீவகசிந்தாமணி என்னும் நூலை இயற்றிய திருத்தக்கதேவர் என்பார். ஆசிரியர் காலம் கடைச்சங்க காலத்திற்குப் பிற்பட்டதென்பர் சிலர். அது துணிந்துகூறுவதற்கு இயலாததொன்றேனும், மணிமேகலை சிலப்பதிகாரங்கட்குப் பிற்பட்டகாலத்திலேயே சீவகசிந்தாமணி இயற்றப்பட்டதென்று கருதத்தகும். திருத்தக்கதேவர் அருகசமயத்தவர் என்பது அவர் இயற்றிய சீவகசிந்தாமணியாலும் செவ்விதின் விளங்குமென்க. கடவுள்வாழ்த்தானும் இடையிடைவரும் சில

தொடர்களாலும் அருகசமயக்கொள்கைகளும் அருகசமயக்கடவுளது பெயர்களும் ஆசிரியரால் விளக்கப்பட்டமை கண்டுகொள்க. 'சினவரன் சொன்ன நன்னூல் ஒன்றிய மனத்தராகி', 'சுடர்கொள்பூம் பிண்டிநாதன் சொல்லறந் துணிந்து', வேலை வல்வினை துகளற விளக்கிய விளங்கொளி மணிச்சோதிக், கோல முக்குடையுடையவர்க் கல்லதென் கைத்தலங் குவியாதே' எனவரும் நரிவிருத்தவடிகள் ஆசிரியர் அருகசமயத்தார் என்பதை நன்கு வற்புறுத்துமாறு காண்க.

**இந் நூலகத்துப்பயின்றுள்ள அருகசமயக் கொள்கைகள்.**

1. *தீய செய்தார் நரகராதல்:-*

*'நன்றியில் செய்கை தம்மால் நாரகர் தம்மோ டொப்பான்'.* (1)

'நரகர்' என்னும் பெயர் இழிவினையாளர்க்கு அருகரால் வழங்கப்பெறுவது. நரகத்திற் கேதுவானவர் என்றவாறு.

2. **நிலத்திற் கிடப்பின், தம் இயக்கத்தான் உயிர்க்கொலை நேருமெனக் கருதி அருகர் உறியின்மேல் இருத்தல்:-**

*'துன்னு தாபதன் நூரங்குறி யிற்கிடர், தின்ன லெய்தினன்'* (27)

3. நரகமுண்மை:-

*'இறப்பவும் நரகத்திடை யெய்தினான்'*

4. **நல்வினையுளுற்றினவர் குருவத்தில் சேர்தல்:-**

*'மான வேன்மன்னன் மாதவத் தோர்க்குண்டி*
*தான மீயுழிச் சத்திய பாமையும்*
*ஊன மின்மனத் தாலுடம் பட்டனன்*
*ஏன மில்குரு வத்திடை யெய்தினான்'* (30)

***'உத்தம குருவும் புத்தே ளுலகமு முடையர்'***

5. **நன்மைபுரிந்தார் இயக்கராதல்:-**

*'மயக்கின் மாதவத் தார்க்குண்டி யீந்தவன்*
*இயக்கி யாயின னென்பதுங் கேட்டுமால்'.* (31)

6. **மக்கள் நாற்கதியினும் பிறத்தல்:-**

*'பற்றுள மென்றோர் பாவை பாவமும் பழியு மாகிச்*
*சிற்றுள மிலேச்சர் பொல்லா நாற்கதி நவையை நூக்கிச்*
*சொற்றுள வாய துன்பம் பயத்தலிற் றுறந்து போகி'* (33)

நாற்கதியாவன, தேவர், மக்கள், விலங்கு, நரகர் என்னும் நால்வகுப்பினும் பிறப்புறுதல்.

7. உத்தமதான மீந்தார் புத்தேளுலகடைதல்:-

*'உத்தம தான மீந்தே யொண்பொரு ளுவந்து நல்ல*
*உத்தமர்க் குவந்து முன்னே யுத்தம தான மீந்தே*
*உத்தம நெறிநின் றார்க்கு முவமையொன் றில்லை யாகும்*
*உத்தம குருவும் புத்தே ளுலகமு முடைய ரன்றே'* (40)

## ஆசிரியரது உள்ளம்

திருத்தக்கதேவர் அறத்தை வலியுறுத்தும் இவறன்மையைக் கடிந்தும் தவத்தை உயர்த்தும் கூறுகின்றமை, அவரது உள்ளம் அறமுதனெறிகளில் நிலைபெற்றமையைத் தெள்ளத் தெளிய விளக்குகின்றது. கொலைபுரிதல் ஊனுண்ணலாகிய குற்றங்களை ஆசிரியர் இடத்திற்கு ஏற்ப மிகக் கடிந்துரைப்பர். இதனான், அவரது இனிய ஒழுக்கமும் அருட்பான்மையும் நன்கு மிளிர்கின்றன.

## நூல்

'நரிவிருத்தம்'-என்னும் இந்நூல் 'உவமைக்கதை நீதி நரிவிருத்தம்' என்னும் பெயராலும் வழங்கப்பெறும்; ஆசிரியர் தாம் புகலப்புக்க நீதிகளையும் சமயக்கோட்பாடுகளையும் புலப்படுத்தற்பொருட்டு ஆண்டாண்டுக் கதைகளை எடுத்தாளுதலின், இப்பெயர்த்தாயிற்றுப் போலும். இந்நூல் விருத்தப்பாக்களானாகியது.

## நூல்செய்தற்குக் காரணம்

ஆசிரியர் இந்நூல்செய்தற்கு ஒரு காரணம் கூறுவாருமுளர். அஃதாவது, ''திருத்தக்கதேவர் சீவகனதுசரிதத்தைப் பெருங்காப்பியமாகப் பாடுதற்கெண்ணித் தம்மாசிரியரிடத்துத் தமது எண்ணத்தை எடுத்துரைப்ப, அவர் தேவரது வன்மையை ஆயும்பொருட்டு அப்போழ்து தம் காட்சியிற்பட ஓடிய ஒரு நரியைச் சுட்டிக்காட்டி, 'இவ்விலங்கைக்குறித்து நின்கருத்துக்கு இயைந்தவாறு ஒருகதை புனைக' எனக் கூறினர். தேவரும், உடனே, பல நீதிகளும் அருகசமயக்கோட்பாடுகளும் அமைய 'நரிவிருத்தம்' என்னும் இந்நூலைப் பாடினர்'' என்பதாம். நரிவிருத்தத்திற் கூறப்பெறும் நரியின்கதை முன்னரே வழங்கி வருவதாகக் கோடற்குச் சில சான்றுகள் காணப்படுகின்றமையின், தேவர் இக்கதையைக் கற்பித்தாரெனல் சாலாது. அன்றியும், தேவர் இந்நூலிற் பலவிடங்களிலும் எடுத்துக்காட்டுகின்ற கதைகளும் அவர் காலத்துக்குமுன்னரே வழங்கின

என்பதற்கு அகச்சான்றுகளேயமையும். அக்கதைகளை விரித்துக்கூறாமற் சுட்டிச் செல்வதனால் அவை முன்னரே வழக்கில் இருந்திருத்தல்வேண்டுமென்பது தெளியப்படும். 'மெய்ப்பொரு டேறலன் பற்றுள மேபுரிந், திப்பை யாக்கையிற் றேர்ச்சியில் வாணிகன், கப்பி யாப்பிறந் தானெனுங் கட்டுரை, ஒப்ப நூலுணர்ந்தார் சொலக் கேட்டுமால்', 'தாடிவெண்ணெய் தனதுரை கேட்டுமால்', 'இயக்கியாயின ளென்பதுங் கேட்டுமால்' எனத் தாம் கூறப் புக்க கதைகளைத் தாமே முன்னர்க் கேட்டுள்ளமையை ஆசிரியர் தெரிக்கின்றது நோக்க, நரியின்வரலாறும் தாம் கேட்டதாகவே கொள்ளுதல் கூடும். மேலும், பிற இடங்களில், 'எனப் பெரியோர் கூறுவர்' என்னும் பொருளில் 'என்ப' என்னும் வாய்பாட்டாற் சிலகதைகளை எடுத்துக்காட்டுவதும் இதற்குச் சான்றா மென்க.

'நரிவிருத்தம்' என்பது 'நரியின்வரலாறு' என்று பொருள்படும். 'விருத்தம்' என்பது 'செய்கை' எனப் பொருள்படும் வடசொல்.

### கதைச்சுருக்கம்

ஒரு வேடன், கானகத்தின்கண்ணே தினையை அழித்த ஒரு யானையின் நெற்றியிற் கணைதொடுப்ப, அவ்யானை அவன் நின்ற புற்றின் மீது பாய்ந்து, வீழ்ந்து, இறந்தது. புற்று, அதிர்தலான், அதன்கண் இருந்த பாம்பு வேடனைக் கடித்தது. வேடனும் வாளை உருவி அப்பாந்தளை வெட்டி, விடமேறித்தானும் இறந்தனன். இதனைப் பசியான் வாடி உழலும் ஒரு நரி கண்டு, '' களிறு அறுதிங்கட்காகும்; கானவனாகும் ஏழ்நாள்; நாகம் இற்றைநாட்கு இரையாயிற்று; இப்போழ்தைய உணவிற்கு வேடன் கைவில்லின் தோறகயிற்றை (நாணை)த் தின்பல்'' என்று கருதி, நாணின் குதையைக் கௌவி அறுத்தது. அறுப்பவே, விற்றண்டு நிமிர்ந்து, 'தன் வாயிற் கோத்துக் கொள்ளவே நரியும் இறந்தது- என்பது நூலிற் போந்த கதை.

நரியின்வரலாறு ஏழு செய்யுட்களான் முடிக்கப்பட்டுள்ளது. அப்பால், நூலிற் கூறப்படுவன நன்னெறிகளும் அவற்றை வற்புறுத்துக் காட்டும் கதைகளுமேயாகும். அக்கதைகளுள்ளும் பெரும்பாலன சைனமதம்பற்றியனவே. இதனுள், இருபதுகதைகள், சிறந்தன உள. அவற்றிடையே, இவறன்மையைக்குறித்து உரைக்குமிடத்து, ஒரு பாடலில், மகாபாரதக் கதை சுட்டப்பட்டுள்ளது. அதில் 'துரியோதனன் பாண்டவரைவர்க்கும் அவரது தாயபாகத்தைக் கொடாமையால், தன் கிளையோடு தானும் இறந்தொழிந்தான்' என்னும் கருத்து அமைந்துகிடக்கின்றது. அப்பாடல் வருமாறு:-

*"அஞ்சு மின்னதி லோபமில் லோர்களுஞ்*
*செஞ்சு டர்நெடு வேற்றிரி யோதனன்*
*பஞ்ச வர்க்குமண் பாகங்கொ டாமலே*
*துஞ்சி னான்கிளை தன்னொடு மென்பவே"* (21)

பலகதைகள் கூறப்பெறினும், அவையெல்லாம் ஆசிரியர் தாம் புகல எடுத்துக்கொண்ட நரிவிருத்தத்தை யடியொற்றிவருதலின், 'நரிவிருத்தம்' என்னும் பெயர் இதற்கு இயைபுடைத்தாயிற்று என்க. அன்றியும், அப்பெயரமைதியை விளக்கக் கடைபோக்குதற்பொருட்டு ஆசிரியர், 'செத்தவிந் நரியைப் போலச் செய்பொருளீட்டுவார்கள்' எனவும், 'சுற்றினார் வில்லின் வீழ்ந்த சூழ்ச்சியினரியைப் போலப் பற்றினார்' எனவும், 'தேர்ச்சியிலா நரிவிருத்தம் கேட்டலும்' எனவும், 'மாட்சியிலா நரி உற்ற கோட்டிறத்தின்' எனவும் இடையிடையே நரிவிருத்தவமைதியைச் சுட்டிச் செல்கின்றமையும் ஆயற்பாலது என்க.

## நீதிநெறிகள்

இச் சிறுநூலிடை ஆசிரியர் எடுத்துக்காட்டும் நீதிகள்தாம் பல. அவற்றை நோக்குழி இதனை ஓர் நீதி நூல் என்று கூறுதல் வழுவெனப்படாது. இதனுட் போந்த நீதிகளுள் ஒரு சில ஈண்டுக் காட்டப்படும்.

## அறம்

அறத்தை ஆசிரியர் பலவிடங்களிலும் திறம்பட உரைத்துளர். யாவரும் மேற்கொண்டு ஒழுகப்பெறுவது அறமே எனவும் அதனைச் செய்யாதார் தேர்ச்சியில்லாதவர் எனவும் கூறுவர். 'சித்தம்வைத் தறங்கள் செய்யார் தேர்ச்சியின் மாக்களந்தோ' (8) என ஆசிரியர் இரங்கியுரைத்தல் காண்க. அறஞ்செய்வார் அறிவுடையர் எனவும் அல்லாதார் கடைய ரெனவும் அறத்தின்மிக்கது பிறிதுயாதுமின்று எனவும் ஆசிரியர் கூறுவன மிக்க நயமுடையன.

*'உண்டலோ டுறங்க லச்ச மிணைதலு மொருங்கு நாடின்*
*மண்டிணி யுலகின் வாழு மாக்களும் விலங்கு மொப்பாம்*
*கண்டதொன் றுண்டு நல்ல வறங்கடைப் பிடித்த நீரார்*
*பண்டித ரேனை மாக்கள் பசுவினுங் கடைய ரன்றே'* (12)
*'அளவிலா வறத்தின் மிக்க தியாதுமற் றில்லை'* (14)

என்பதனை,

*'அறத்தினூங் காக்க மெவனோ வுயிர்க்கு'* (திருக்குறள்-4-1)
*'அறத்தினூங் காக்கமு மில்லை'* (ஷை-4-2)

என்பவற்றோடு ஒப்பிட்டு நோக்குக.

*'ஊக்கி யொண்பொரு ளெட்டுணைத் தாயினும்*
*ஆக்கி நல்லறஞ் செய்வர்பொய் யாக்கொளின்*
*நீக்கி நல்லறம் நிற்ப நிலாவிடிற்*
*றேக்கு மேற்றுணைச் செல்கதி யில்லையே'* (46) என்பதை,
*'ஒல்லும் வகையா னறவினை யோவாதே*
*செல்லும்வா யெல்லாஞ் செயல்'* (திருக்குறள்-4-3)

என்பதனோடு ஒப்பிட்டுக் காண்க.

'ஆக்குவ தேதெனி லறத்தை யாக்குவ' (50) என்பதனால் அறமே தலைசிறந்தது என்பது அறியப்படும். திருவள்ளுவனாரும், அறமே தலைசிறந்தது என்பதனைச் 'செயற்பால தோரு மறனே' (திருக்குறள்-4-10) எனத் தெளிவுபட அருளியது ஈண்டுக் கருதற்பாலதாம்.

இதுகாறும் கூறியது ஒவ்வொருவரும் செயற்பாலதாய நல்வினைப் பொருட்டாகும் அறமாமென்க.

### ஈகை

இனி மக்கட்கு உறுதிதருவன பகுத்துண்டுவாழ்தலாகிய தானமும் தவமுமாமென, ஆசிரியர்:

*'ஓங்கிய தவத்தின் மிக்க வுறுதவர்க் குறுதி நாடின்*
*ஈங்கிரண் டல்ல தில்லை யிசைகொடா நிற்ப மண்மேல்*
*பாங்கமை செல்வ ராகிப் பகுத்துண்டு வாழ்த லொன்றே*
*தாங்கிய தவத்தின் மிக்க தவநிலை நிற்ற லொன்றே'* (34)

என்னுஞ் செய்யுளிற் றெரிக்கின்றனர். தானமும் தவமும் சிறந்தனவாம் என்பது திருக்குறளில், 'தானந் தவ மிரண்டும்' (2-9) என அவை இரண்டனையும் உடங்குவைத்துக் கூறுதாலனும் பெறப்படும்.

*'ஈகைநற் றான மீந்தா ரிணையிலாக் குருவின் மிக்க*
*போகத்தைக் கொடுத்துப் புத்தே ளுலகமுங் கொடுத்து மண்மேல்*
*ஏகநல் இன்ப மாக்கி யிறைவனற் காட்சி யீயும்'* (36)

என்பதூஉம் ஈண்டுக் கருதற்பாலது.

*"சுற்றினார் வில்லின் வீழ்ந்த சூழ்ச்சியி னரியைப் போலப்*
*பற்றினார் பெரிதும் வெளவிப் பகுத்துணா தீட்டினார்கள்*
*மற்றுணா வெறுக்கை தன்னை மன்னரும் பிறரும் வெளவத்*
*தெற்றென வெளிறு நீரார் செல்வமு மிழப்ப ரன்றே"*

என்பதனுள், பற்றுள்ளமுற்றுப் பொருளை வழங்காதார் அதனை இழப்பர் என்பது வற்புறுத்தப்பட்டது காண்க. இதனை, 'கொடா அது வைத்தீட்டினா ரிழப்பர்' என்பதனோடு ஒப்பிடுக.

*"நாட்டினா முரைக்கப் பட்ட முழைநரி யனைய நீரார்*
*ஈட்டிய பொருள்க டம்மை ஈதலுந் துய்த்த றானும்*
*மாட்டில ரகழ்ந்து பார்க்கீழ் நிலங்கொள வைப்பர் மாதோ*
*பாட்டரு மக்கள் யாக்கைப் பயன்கொளாக் கழிப்ப ரன்றே"*

என்பதனொடு,

*"உண்ணா னொளிநிறா னோங்கு புகழ்செய்யான்*
*துன்னருங் கேளிர் துயர்களையான் - கொன்னே*
*வழங்கான் பொருள்காத் திருப்பானேல் அ ஆ*
*இழந்தானென் றெண்ணப் படும்"*

என்னும் நாலடியையும்,

*"ஈத்துவக்கு மின்ப மறியார்கொல் தாமுடைமை*
*வைத்திழக்கும் வன்க ணவர்"*

என்னும் திருக்குறளையும் ஒப்பிட்டு நோக்குக.

*"பற்றுள மென்றோர் பாவை பாவமும் பழியு மாக்கிச்*
*சிற்றுள மிலேச்சர் பொல்லா நாற்கதி நவையை நூக்கிச்*
*சொற்றுள வாய துன்பம் பயத்தலிற் றுறந்து போகிக்*
*கற்றறி வுடைய மாந்தர் கடிந்தன ரதனை யன்றே"* (33)

என்பதனொடு,

*"பற்றுள்ள மென்னு மிவறன்மை யெற்றுள்ளு*
*மெண்ணப் படுவதொன் றன்று"*

என்னும் திருக்குறளை ஒப்பிடல் அமையும்.

*"மற்றி மண்மிசைப் பற்றுளத் தாற்கிளை*
*உற்ற மாந்தர் உரைபல ஒண்மையால்*

*குற்ற மாய்க்கொண் டுலோபெனும் பாவியைக்*
*கற்ற மாந்தர் கடிந்தன ரென்பவே"* (49)

என்பது இவறன்மை பாவியெனவும், அதனைக் சுற்றமாந்தர் கடிந்தன ரெனவும் கூறுதலால், கல்லாதாரும் பாவியருமே அதனை மேற்கொள்வர் என்னும் பொருளை வற்புறுத்தார் ஆசிரியர் என்க.

## நிலையாமை

சைநசமயத்தார் இளமை, வனப்பு இன்பம், செல்வமுதலிய நிலையா எனவும், எனவே துறவே மேற்கொள்ளத் தக்கது எனவும் விதந்து எடுத்துக்கூறுவர். நாலடியாரில் யாக்கைநிலையாமை செல்வநிலையாமை முதலியவற்றிற்குத் தனித்தனி அதிகாரங்கள் வகுக்கப்பெற்றமை ஈண்டுக் கருதத்தக்கது. திருக்குறளில் 'நிலையாமை' என்னும் அதிகாரத்தில், பொருள்களின் நிலையாமையைப் பொதுவுறக்கூறியிருத்தலும் கருதற்பாற்று.

நடைபொதுப்படத் தெளிவும் எளிமையும்பட்டுக் கிடப்பினும், இடையிடை எடுத்துக்காட்டப்பெறும் கதைகளை யுணராவிடில் பொருள் இனிது காண்டல் அரிது.

## மேற்கோள்

இந்நூலில் திருக்குறட் சொற்பொருள்களின் அமைதியும் நடையமைதியும் ஆண்டாண்டுக் காணப்படுகின்றன. நாலடியாரின் நறுமணமும் இடையிடை வீசுகின்றது. பற்றுள்ளம், இவறன்மை முதலிய சொற்கள் திருக்குறட் சொற்கள். 'நாடி நடொறும்' (28) என்பதனொடு 'நாடொறு நாடி முறைசெய்யா மன்னவன், நாடொறு நாடு கெடும்' என்னுந் திருக்குறளடையை ஒப்பிடுக. 'சுற்றப்பட வொழுகல்' என்னும் திருக்குறளடியின் பொருளையும் சொன்னடையையும் 'சுற்றத்தார் சுற்ற வாழ்தல் (37) என்னும் தொடர் நினைப்பிக்கின்றதன்றோ? 'வரைத்த நாளன்றி வாழ்பவ ரின்மையால்' (48) என்னுந்தொடரும் 'இழைத்தநா ளெல்லை யிகவா' என்னும் நாலடியாரும் நடையினும் பொருளினும் ஒத்துத்தோன்றுதல் காண்க.

# ஈன்று புறந்தருதல்
## -பெண்ணிய நோக்கு*

திருமதி. சு.சந்திரா

சமுதாயத்தின் செயல்பாட்டிற்கு ஏற்ப உருப்பெறுவதும் கால மாற்றங்களுக்கு ஏற்ப மாற்றமுறுவதும் இலக்கியத்தின் இயல்புகளாக அமைகின்றன. தமிழ்மொழியிலும் அவ்வக்காலத் தமிழர்களின் வாழ்க்கை முறைகளும் காலச் சூழல்களுக்கு ஏற்ப வளர்ந்த /மாறிய அவர்தம் மரபுகளும் இலக்கியங்களில் பதிவாகி உள்ளன எனலாம். இலக்கியங்களில் இடம்பெறும் இப்பதிவுகள் அவ்வினச் சமுதாயப் பண்பாட்டு நிலைகளை அறிந்து கொள்ள ஏதுவாக அமைகின்றன. இவ்வழி, பழந்தமிழகத்தில் 'ஈன்று புறந்தந்த' மகளிர் நிலையினைப் பெண்ணிய நோக்கில் காணமுற்படுவது ஆய்வுச் செல்நெறியாகும். புறநானூறு மட்டுமே ஆய்வுக்களமாகக் கொள்ளப்படுகிறது. எனினும், துணைமைத் தரவுகளுக்குப் பிற பழந்தமிழ் இலக்கியங்களும் நோக்கப்படுகின்றன.

### பழந்தமிழ்ச் சமுதாயத்தில் மகளிர் நிலை:-

'பழந்தமிழ்ச் சமுதயாத்தில் மகளிர் நிலை இன்றைக்கு இருப்பது போல இருந்திருக்க முடியாது, ஆயினும் விந்தையாகவே, இன்றைக்கும் அன்றைக்கும், மகளிருடைய நிலைகளில் அதிக வேறுபாடும் இருந்திருக்க முடியாது என்பர் திறனாய்வாளர். இன்றைய நடைமுறை வாழ்வில் ஆண், பெண் சமத்துவம் சட்டத்திற்குட்பட்டதாயினும், நடைமுறையில் சமத்துவநிலை நிலவுகிறது எனக் கொள்ளமுடியாது. பழந்தமிழ்ச் சமுதாயத்தில் ஆடவர், மகளிர், சமத்துவக் கோட்பாடு நிலவவில்லை. மேலும், சமுதாயத்தில் ஆடவருக்கும் மகளிருக்குமான கடமைகள் வெவ்வேறானவையாகும்.

அகப்பொருள் தலைவி அழகும், வாக்குவன்மையும் பெற்றவளாக இருப்பினும், அவளுக்கு எல்லைகள் உண்டு. அவள் தான் வாழ்ந்திருக்கும் நிலம், அதன்விளைபொருள்கள் முதலிய சூழல் தவிரப் பிறவற்றை அறியாதவளாகப் பேதையாக இருத்தல் வேண்டும் என மகளிரை எல்லைக்குட்படுத்துகிறார் தொல்காப்பியர் (தொல்:7:26) அன்பின் ஐந்திணையாம் அகப்பொருள் வாழ்விலும் அவர்தம் உள்ளத்து உணர்வுகள் ஊமையாக்கப்பட்டன. (கலி.குறிஞ்சி.1). மணமான

பெண்களது இல்லற வாழ்க்கையில் ஆடவரது பலதாரமணம் இடையீடிட்டது. மணவாழ்க்கையில் பெண்ணுக்குரிய இன்றியமையாப் பண்பாகக் கற்பு போற்றப்பட்டது. 'உயிரினும் சிறந்தன்று நாணே! நாணினும் சிறந்தன்று கற்பு' எனப்பட்டது. அதே போழ்து, ஆடவர்க்கு, இற்பரத்தையர், காதற்பரத்தையர் எனச் சுற்றம் பெருகியது. விருந்து புறத்தல் தலைவிக்குரிய கடமை எனினும், அந்நியரிடத்தில் பேசும் சூழல் நேரிடின் எதிரில் ஒரு பொருளை வைத்துப் பேசுதல் சமுதாயப் பழக்கமாக இருந்தது. (புறம்: 85 & 86). அதாவது கற்பும், குழந்தைப்பேறும், பொறுமையும், கணவன் மாண்டபிறகு தீப்புகுதலும், கைம்மையும் மகளிர்க்கு உரியனவாக வற்புறுத்தப்பட்டன. தத்தம் கருத்தை வெளியிடும் திறம் மிகுந்த ஔவையார், நச்செள்ளையார் முதலிய பெண்பாற் புலவர்களும் பழந்தமிழ்ச் சமுதாயத்தில் உலவினர் என்பதும் நினைவிற் கொள்ளத்தக்கதாகும்.

## புறநானூற்றில் பெண்கள்:

புறநானூற்றில் மூதின் முல்லை, மகட்பாற்காஞ்சி, மகள்மறுத்தல் முதலிய துறைகளில் அமைந்த பாடல்கள் பெண்களை மையமிட்டு அமைகின்றன. பாரிமகளிர், பூதப்பாண்டியன் தேவி பெருங்கோப்பெண்டு முதலியவர்களது பாடல்கள் பழந்தமிழ்ச் சமுதாயத்தில் ஆண்களைச் சார்ந்த அவர்தம் வாழ்வியலை விளக்குகின்றன எனலாம்.

அள்ளூர் நன்முல்லையார், ஒக்கூர் மாசாத்தியார், ஔவையார், நக்கண்ணையார், காக்கைப் பாடினியார் நச்செள்ளையார், குறமகள் இளவெயினி, பாரிமகளிர், பூதப்பாண்டியன் தேவி பெருங்கோப்பெண்டு, பேய்மகள் இளவெயினி, பொன்முடியார், மாற்பித்தியார், மாறோகத்து நப்பசலையார், வெண்ணிக்குயத்தியார், வெறிபாடிய காமக்கண்ணியார் முதலிய பெண்புலவர்கள் பாடல்களை இயற்றிய அறிவுசால் பழந்தமிழ் மகளிராக உள்ளனர். ஆயினும், அவர்தம் பாடல்களின் மையப்பொருள் ஆய்வுக்குட்பட்டதேயாகும்.

## ஆய்வுப்பொருள்:

வாகைத் திணையில் மூதின் முல்லைத் துறையில் அமைந்த, பொன்முடியாரது. 'ஈன்று புறந்தருதல்' (புறம்312) என்ற பாடலும் 'கெடுகசிந்தை கடிதிவள் துணிவே' (புறம்-279) என்ற பாடலும் இவண் ஆய்வுக்கு உட்படுத்தப்படுகின்றன. இப்பாடல்கள் பெண்ணியத் திறனாய்வுக் கருதுகோளின் அடிப்படையில் நோக்கப்படுகின்றன. இவ்விரண்டு பாடல்களிலும் பழந்தமிழரின் தாய்மைத்துவம் புலனாகின்றது.

முதற்பாடலில், நாட்டிற்கு நற்குடிமகனைப் பெற்றுத் தருதல் மகளிரின் கடமையாகிறது.

இரண்டாம் பாடலில், தன் தந்தையையும், கொழுநனையும் இழந்த போழ்தும் தன் ஒரே மகனைப் போருக்கு அனுப்பும் மகளிரின் வீரச்சிறப்பு விதந்தோதப்படுகிறது.

இவ்விரண்டு பாடல்களிலும் 'தாய்மை' பற்றிய பழந்தமிழ்க் கருத்தாக்கம் இடம்பெறுகிறது. இதனை இன்றைய பெண்ணிய நோக்கில் ஆய்வோம்.

## தாய்மைத்துவம் : பெண்ணியக் கருத்தாக்கம்:

தாய்மைத்துவம் என்பது பொதுவாகப் பெண்களுக்குரிய அடிப்படைப் பண்பாகும். 'குழந்தைப் பேற்றிற்குரியவள்; அக்குழந்தைகளைப் பேணிப்பாதுகாப்பவள்; குடும்பப்பொறுப்புடையவள்; உணர்வு ரீதியானவள்; எதற்கும் எந்நிலையிலும் ஒத்துப் போகும் தன்மை உடையவள்; குடும்பம் என்ற அமைப்பிற்குக் கட்டுப்பட்டவள் என்ற அனைத்துப் பண்புகளின் இருப்பிடம் தான் தாய்மைத்துவம் ஆகும்' என்பர். (பெண்ணியம்.ப.82) மேலும் தாய்மைத்துவம் பற்றிப் பல கருத்துக்களை உரைத்த கிறிஸ்ட்வா 'ஒரு பெண்ணுக்கு மகப்பேறு மகிழ்ச்சியை உண்டு பண்ணுகிறது. அதே நேரத்தில் சமுதாயத்தில் இம்மகப்பேறு பெண்ணுக்கு ஒரு மதிப்பிழந்த தன்மையையும் பயமுறுத்தல் நிலையையும்(Fearing Status) உருவாக்குகிறது என்பார்.

## தாய்மைத்துவம் பற்றிய அட்ரின் ரிச் (Adrinne Rich) கருத்துக்கள்:

அட்ரின்ரிச் தாய்மைத்துவத்தை (1) அனுபவம் (Experience)(2)நிறுவனம் (Institution) என இரண்டு தளங்களில் வைத்துக் காண்கிறார். தாய் என்பவள் பல உணர்வு அனுபவங்களைக் கொண்டவள், அவ்வனுபவங்களின் ஒட்டு மொத்தக் குவிப்புகளும்,அவற்றின் வழி எழும் உடன்பாட்டு, எதிர்மறைக் கருத்துக்களும் தான் அவளைத் 'தாய்மை' என்ற அமைப்பாகத் திகழச் செய்கின்றன எனவுரைக்கும் ரிச், பின்வரும் கூறுகளை வரிசைப்படுத்துகிறார்.

1) தாய்மை அல்லது தாய்மைத்துவத்தை (Mother/ motherhood) பெண்களின் உயர்தனிச் சிறப்பாகப் பார்ப்பதற்குரிய காரணங்கள்! அதாவது, தாய்மையின் இனப்பெருக்கத் தன்மை அவளுக்கும், குழந்தை, குடும்பம் என்ற அமைப்பிற்கும் தீவிர ஆற்றல் வாய்ந்த உறவு முறைகளை

அளிக்கிறது; இனப்பெருக்கம் (அல்லது) குழந்தைப்பேறு ஆற்றல் எனும் தனிச்சிறப்பு தந்தைவழிச் சமுதாயம் பெண்களை அடக்குமுறைக்கு உட்படுத்தக் காரணமாகின்றது.

**2) அனுபவங்களும் அடிமைத்தனங்களும்:**
தாய்மைத்துவப் பண்பமைப்பில் உருவாகும் அனுபவங்களைப் பெண்கள் தமக்கே உரியதாக நினைக்கும் உடைமைத்தன்மை, அடிமைத்தனத்திற்கு வழிவகுக்கின்றது.

11349

**3) தாய்மை என்ற நிறுவனம்/அமைப்பில் பார்க்கப்படும் கூறுகள்:**

இதில் தாய்மைக்குரிய உணர்வுக் குவியல்களையும், விளைவுகளையும் ஒன்றாகக் குவித்துப் பார்க்கக் கூடிய தளமாகக் கொள்வது என்பதாகும். இதில், பாலியல் வன்முறை, பொருளாதார அடிப்படையிலான மணவினை உறவு, அன்பு முதலிய பெண்களுக்கு உரிய பண்புகள், ஆணைச் சார்ந்திருத்தல், முழுநேரத் தாயாக இருத்தல், குடும்பப்பொறுப்பு, அறியாமை நிரம்பியவள், தாய்மை எனக் காலங்காலமாக மரபு வழிப்பட்ட தாய்மைக்குரிய கருத்தாக்கங்களை, நிறுவன அமைப்பில் மாற்றல் வேண்டும்.

**4) அடிமைத்தனப்படுத்தும் தந்தை வழிச் சமுதாயப் பண்புகள்:-**

தந்தைவழிச் சமுதாயத்தில் பெண்களின் சிறப்புத் தன்மைகளை, அவள் வலிமைகளைக் குறைவுபடுத்துவதும், தாழ்த்துவதும் தொடர்ந்து நிகழ்கிறது. தாய்வழிச் சமூக அமைப்பில் மதிப்பும், மலைப்பும் மிக்கதாகக் கருதப்பட்ட பெண்மையின் மகப்பேற்றுத் திறன் (Capacity for give birth) தந்தைவழிச் சமூகவிதிகளால் (Patriorchial Rules)குறைவுபடுத்தப்பட்டன. அதாவது உளவியல் ரீதியில் தந்தைவழிச் சமுதாயம் பெண்களைத் துணைவகையாகக் (Subgroup)கருதுகிறது. (இதற்குச் சான்றாக, வள்ளுவரின் 'வாழ்க்கைத் துணைநலம்' என்பதனைச் சுட்டலாம்.)

**5) ரிச் கூறும் இறுதிக் கருத்து, அடிமைத் தனத்திலிருந்தும், தாய்மைத்துவ அமைப்பிலிருந்தும் விடுபடுவதற்குரிய விதிமுறைகள் (Free from motherhood):** அதாவது, 'இனப்பெருக்க அமைப்பிருந்தாலும், பெண்களுக்கு அவர்களுடைய உடம்பின் மீது உள்ள உரிமையை நிலைநாட்டிக் கொள்ள வேண்டும்' என்பது இதன் பொருளாகும். (இக்கருத்துக்கள் 'பெண்ணியம்' நூலின் 81-92 பக்கங்களில் இடம்பெற்றுள்ளவற்றின் அடிப்படையில் எழுதப்பட்டவை)

இவ்வடிப்படையில் 'ஈன்று புறந்தருதல்' எனும் கடமையிலுள்ள பழந்தமிழ் மகளிர் நோக்கப்படுகிறார்கள்.

## தாய்மைத்துவம்: சிறப்பும், அடிமைப்போக்கும்:

பொன்முடியாரின் 'ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே', என்ற தொடர் தாய்மை அல்லது தாய்மைத்துவத்திற்குரிய உயர்தனிச் சிறப்பாக அமைகிறது. இதன்வழி தாய்க்கும், குழந்தைக்கும், குடும்பம் என்ற அமைப்பிற்கும் இடையேயான ஆற்றல் வாய்ந்த உறவு முறைகளை அளிக்கிறது. அதாவது, பெண்களின் இனப்பெருக்கத் தன்மை பழந்தமிழ்ச் சமுதாயத்தில் பெற்றிருந்த நிலைப்பாட்டினை நமக்குப் புலப்படுத்துகிறது எனலாம்.

'சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே!' என வரும் தொடரும், அதன் பின்னர் வரும் தொடர்களும் பழந்தமிழ்ச் சமுதாயத்தில் தாய்மைக்குரிய அனுபவங்ளோடு அடிமைத்தனங்களையும் வெளிச்சமிடுகின்றன. 'தாய்மை' என்ற பண்பின் கீழ் இன்பத்திலும் துன்பத்திலும் மூழ்கி இருக்கும் பெண்கள் குழந்தைகளைப் பெறுவதிலும், பேணுவதிலும், வளர்த்து உருவாக்குவதிலும் தன்னிறைவும், உள்ளார்ந்த மகிழ்வும் பெறுவது சில பெண்களால் ஒத்துக்கொள்ளப்படுகின்றது. ஆயின், பெண்மைக்குரிய இந்த இனப்பெருக்கத் திறமை அனுபவத்தன்மை சமுதாயத்தில் பெண் அடிமைப் போக்கிற்கு வழிவகுப்பதாக அமைகிறது. பழந்தமிழ்ச் சமுதாயம் இனக்குழுச் சமுதாயமாக இருந்தது என்பதைத் திறனாய்வாளர் பலர் ஆங்காங்கு சுட்டிச் செல்கின்றனர். இனக்குழுச் சமுதாயத்தின் அடிப்படைத் தேவையான மக்கள்பெருக்கத்தை நிறைவு செய்யும் பெண்மை காலப்போக்கில் தந்தை வழிச் சமுதாயத்தால் 'மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிரே' என அடிமைப்படுத்தப்பட்டது.

## தாய்மை என்ற நிறுவன அமைப்பு:

நிறுவனம் அல்லது அமைப்பு என்ற முறையில் நோக்கும் போது, ஆணைச் சார்ந்திருக்கும் பாங்கு பழந்தமிழ்ப் பெண்களுக்கு வற்புறுத்தலாக அமைகின்றது. சமுதாயத்தின் கூட்டுப் பொறுப்புணர்வின் கட்டுப்பாடுகளும் வரையறைகளும் பழந்தமிழ்ப் பெண்ணை முழுநேரத் தாயாக இருக்க வைக்கிறது எனலாம். இதனை அறிவுசார் நிலையில் மூதின் மகளிரைப் பாடும் ஒக்கூர் மாசாத்தியாரின் 'கெடுகசிந்தை கடிதிவள் துணிவே' என்ற தொடர் வெளிப்படுத்துகிறது எனலாம். இதனைப் 'புறநானூற்றில் கூறப்படும் மூதின் மகளிர் எனும் போர்க்குலத்தார்

இயல்பான பெண்மையுடைய மகளிர் குழாத்தைச் சேர்ந்தவர்கள் அல்லர் போலும். அப்படியிருந்தும் சங்க காலத்தில் மகளிர் போர்களில் ஈடுபட்டதாகக் கேள்வியுறவில்லை' எனத் திறனாய்வாளர் உரைப்பது கருதத்தக்கதாகும்.(சுப்பிரமணியன். ந., மேலது ப.348)

கொண்ட கொழுநனும் தந்தையும் போர்க்களத்தில் மாண்ட பின்பும் போருக்குத் தான் செல்லாது தன் ஒரே மகனைக் களத்திற்கு அனுப்பும் பெண்மை, தந்தைவழிச் சமுதாய அமைப்பின் மரபுகளுக்குக் கட்டுப்பட்டு அடங்கிப்போகும் தன்மையில் காட்சியளிக்கிறது எனலாம்.

புறநானூற்றின் பிறிதொரு ஏறாண் முல்லைப் பாடலில்;

*'... ... ... நின்மகன்*
*யாண்டுளனோ என வினவுமதி; என்மகன்*
*யாண்டுள னாயினும் அறியேன்; ஓரும்*
*புலிசேர்ந்து போகிய கல்அளை போல*
*ஈன்ற வயிறோ இதுவே'* (புறம்:86)

எனவுரைக்கும் தாயின் கூற்று பழந்தமிழ்ச் சமுதாயத்தில் தாய்மையின் நிலையைத் தெளிவுபடுத்துகிறது. பழந்தமிழ்ப் பெண்கள் சமுதாயத்திற்கு ஆண்களை உற்பத்தி செய்யும் எந்திர நிலைக்குத் தள்ளப்பட்டதை இப்பாடல் வெளிப்படுத்துகிறது. அதாவது, பழந்தமிழ்ப் பெண்கள் குடும்பம், சமுதாயம் முதலியவற்றிற்குள் கட்டுப்பட்டும், தாய்மை எனும் பெருமித உணர்வுக்கு ஆட்பட்டும் தாழ்வு மனப்பான்மை, அறியாமை முதலிய நிலைக்குட்பட்டும் இருந்தனர் என ஊகிக்க இடமளிக்கிறது.

**தாய்மைத்துவம்: துணைவகை:**

புறநானூற்றின் ஏனைய மூதின் முல்லைப் பாடல்களில் தலைவனது போர்க்கள வெற்றியும் அதனைத் தொடர்ந்து அத்தலைவியர் இரவலர்க்குக் குறைவுபடாது கொடுக்கும் வள்ளன்மைத் தன்மையுடையவராக அமைவதும் விளக்கமுறுகின்றன. பெண்மையின் இயல்பான தன்மைகளுக்கு அப்பாற்பட்டு (ஒக்கூர் மாசாத்தியார் கூற்றுப்படி?!) ஒரு குலத்திற்கு ஒரு மைந்தனைப் போருக்கு அனுப்பும் தாயும், புலிக்கல் அளைபோல வீரனை ஏந்திய வயிறுடைய தாயும், மார்பில் புண்பெற்று இறந்த மைந்தனுக்குப் பாலூட்டிய தாயும் எனப் பழந்தமிழில் பெண்கள் சுட்டப்பட்டாலும் தந்தைவழிச் சமூக ஆண்களின் வீரநிலையை மிகைப்படுத்த ஊடகமாகவே அவர்கள் பயன்படுகின்றனர். இவ்வழி, பழந்தமிழ்ச் சமுதாயத்தில் பெண்கள் துணைக்குழுவாக ஏற்றம் பெற்ற ?! நிலையில் உலவுகின்றனர். தாய்மைத்துவம் என்ற மதிப்பிழந்த

தன்மையின் அடிப்படையிலான வகைமாதிரிப் பெண்களாகப் (Sterio Typed Women) பழந்தமிழச் சமுதாயத்தில் மகளிர் இருந்தனர் எனலாம்.

## தாய்மைத்துவத்திலிருந்து விடுதலை:

ரிச் கூறும் இறுதியான கருத்தாக்கமான தாய்மைத்துவத்திலிருந்து விடுதலை என்பது முடிந்து போன காலத்தில் வாழ்ந்த பழந்தமிழச் சமுதாயத்திற்குத் தேவையில்லை. எனினும் அவ்விடுதலை வாழ்வு பெற்ற சில மகளிரையும் நம்மால் சுட்ட முடியும். தன் உடற்கூற்றின் மீதும் தாய்மைத்துவத்தினின்றும் விடுதலை பெற்ற ஔவையை (நம்பக்கூடிய சான்றுகள் ஏதுமற்ற வாய்மொழிக் கதை வழி) இதற்கொரு சான்றாக்கலாம்.

## தொகுப்புரை:

பழந்தமிழில் பெண்ணிய நோக்கில் மகளிர் நிலையைக் காணும் இவ்வரைவு ஒருசில பாடல்களை மட்டும் களமாகக் கொண்டது. எனினும், இவ்வடிப்படையில், 'பழந்தமிழ்ப் பெண்கள் தாய்மை எனும் தனிச்சிறப்புப் பெற்றிருந்தனர்; அச்சிறப்பின் அனுபவங்கள் அவர்களைப் பழந்தமிழ்ச் சமுதாயத்தில் அடிமைப்படுத்துவதற்கு வழி கோலியது. ஆணைச் சார்ந்தும், எல்லைகளுக்குட்பட்டும், துணைக் குழுவாகவும் வாழ்வதற்கு இடமளித்தது' என்ற முடிவிற்கு நம்மை இட்டுச் செல்கின்றது. இவ்வரைவில் திருமண உறவு முறைகள், பரத்தையர் சமுகம், கணவனுடன் மாய்தல், கைம்பெண்நிலை முதலிய கூறுகள் எடுத்துக்கொள்ளப் படவில்லை. எனினும், இக்கூறுகளும் மேற்கண்ட முடிவிற்குத்தான் இட்டுச் செல்லும் என்பதில் ஐயமில்லை.

அன்பு அச்சகம், மதுரை ✆ 741116